
# திருவேங்கடத்திலகம்



ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :



# திருவேங்கடத் திலகம்

(ஆழ்வார்கள் பாசுரங்களில்
வேங்கடவன் - உரையுடன்)


ஆசிரியர்கள்

டாக்டர். M. கோவிந்தராஜன், Ph.D.,

ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ S. ஆழ்வான்

டாக்டர். M. கோவிந்தராஜன்
38, சவுத் வெஸ்ட் போக் ரோடு,
தி.நகர்,
சென்னை - 600 017.
(044) 4343486

S. ஆழ்வான்
1, சிவபுரம் தெரு,
திருநெல்வேலி - 627 001
(0462) 335016

முதல் பதிப்பு 2001 படிகள் : 1000

"This book is published with the Financial Assistance of Tirumala Tirupathi Devasthanams under their Scheme, 'aid to publish religious books.'"

விலை ரூ. 25/-

அச்சிட்டோர் :
**கவி டிடிபி**
56, சுவாமி சன்னதி தெரு,
திருநெல்வேலி - 627 006.
போன் : 0462 - 333327

# பணிவுரை

திருவேங்கடம் என்பது திருமாலின் திவ்ய தேசங்கள் நூற்றெட்டனுள் முக்கியமானதும், வடநாட்டுத் திருப்பதிகள் பதினொன்றில் சிறப்புடையதும் ஆகும். ஆழ்வார்கள் பதின்மரால் மங்களா சாசனம் செய்யப்பட்டது இத்திருத்தலம். அதன் காரணமாகவே இத்தலத்திற்கு ஏற்றமும், பெருமையும் அதிகம். கோயில், திருமலை பெருமாள் கோயில் என்று வைணவ உலகம் போற்றும் சொற்றொடரில் இரண்டாவதாக அமைந்துள்ளது திருமலை. மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பதின்மர் வேங்கடவனைக் குறித்துப் பாடிய பாசுரங்களின் தொகுப்பே "திருவேங்கடத்திலகம்" என்னும் பெயருடைய இந்நூல்.

நம்மாழ்வார் எம்பெருமானிடம் நமக்காகவே, 'பிரானே ! மகா பாபியான நான் புஷ்பங்கள் நிறைந்த உனது திருவடிகளைக் கிட்டும்படி கற்பித்தருள வேண்டும்' என வேண்டுகிறார்.

"அகல கில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பனாகிய" ஸ்ரீநிவாசனிடம் பெரிய பிராட்டியாரை புருஷகாரமாக முன்னிட்டுக் கொண்டு நமது இயலாமையை அவனிடம் முறையிட்டால் அவன் நமக்கு எல்லாவித நன்மைகளையும் செய்வான். பரம்பொருளாகிய வாசுதேவன் ஸ்ரீவைகுந்தத்தில் விரக்தி அடைந்து திருமலையில் திருவேங்கடமுடையானாக எழுந்தருளியிருப்பது நம்மை இரட்சிப்பதற்கே.

திருவேங்கடம், திருவைகுந்தம், திரு. வெஃகா, திருக்கோவலூர் என்று திருத்தலங்களின் பெயர்களையும் அத்தலங்களில் சேவை சாதித்தருளும் பெருமானைப் பற்றிச் சொன்னாலே நம் துன்பங்கள் கெடும் என்கிறார் பொய்கையாழ்வார். (முதல் திருவந்தாதி 77) எம்பெருமாள் தன்னை நினைப்பவரின் மனத்தில் வாழ்கின்றான் என்கிறார். பேயாழ்வார் தனது மூன்றாம் திருவந்தாதியில் இவ்விதம் ஒவ்வொரு ஆழ்வாரின் பாசுரங்களும் வேங்கடவனை அநுபவிக்க நமக்கு மிகவும் உதவுகின்றன.

அரிய ஆழ்பொருள்கள் கொண்டுள்ள இந்தத் திராவிட வேத சாகரத்தின் பாசுரங்களுக்கு உரை எழுத முற்பட்டது திருவேங்கட முடையானின் பூரண ஆசியினால் தான். குணசீலர்களான பெரியோர்கள் இப்புத்தகத்தைப் படிக்கும்போது அதில் தவறுகள் ஏதாவது காண்பின், அதைக் கருணையுடன் பொறுத்தருள வேண்டுகிறோம்.

## எம்பெருமானாரின் திருமலையாத்திரைகள்

எம்பெருமானார் திருமலைக்கு மூன்று முறைகள் எழுந்தருளியுள்ளார்.

முதல் யாத்திரையில் மூன்று நாட்கள் உபவாஸமிருந்து அப்பனை மங்களா சாஸனம் பண்ணினார். தமது நியமனப்படி அனந்தாழ்வான் திருவேங்கடவனுக்குப் புஷ்ப கைங்கர்யத்துக்காக அமைத்திருந்த நந்தவனத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

இரண்டாவது யாத்திரையில் அப்பன் எம்பெருமானாருக்கு திருவாழி திருச்சங்குகளுடன் சேவை தந்தருளினார். அப்பன் மார்பில் அலர்மேல் மங்கையை அணிவித்தார்.

மூன்றாவது யாத்திரையில் திருச்சித்திரக் கூடத்தெம் பெருமானான கோவிந்த ராஜப் பெருமானை திருப்பதியில் இருந்த ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலைப் பெரிதாக்கி ஸன்னதி அமைத்து ப்ரதிஷ்டை செய்வித்தார். ஆண்டாளையும் ப்ரதிஷ்டிப்பித்து அநேக உத்ஸவங்களையும் ஏற்படுத்தியருளினார்.

திருமலைக்குப் புனிதப் பயணம் மேற்கொள்பவர்கள், அருளிச் செயல்களில் ஈடுபாடுடைய அனைவரும் இப்புத்தகத்தை விரும்பி ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறோம். பாசுரங்களுக்கு எளிய தமிழில் உரை எழுதப்பட்டிருப்பது அனைவருக்கும் பயனுள்ளதாக யிருக்கும் இந்நூல் என்பது எங்களது நம்பிக்கை.

இந்நூலுக்கு உரை எழுதுவதில் உதவிய புலவர் திரு.அ.சோமசுந்தரம், M.A.,M.Phil.,B.Ed., அவர்களுக்கு எங்களது நன்றி.

வானமாமலை மடத்தின் முன்னாள் ஆஸ்தான வித்வான் ஸ்ரீமான் உ.வே. N.S. கிருஷ்ணய்யங்கார் அவர்கள் உரையினைப் பரிசோதித்துப் பல அருமையான ஆலோசனைகள் வழங்கி உதவினார்கள் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகத்தை மிக நேர்த்தியாக அச்சிட்டுக் கொடுத்த கவி டி.டி.பி. உரிமையாளர் ஸ்ரீ S. பாலாஜி அவர்களுக்கு எங்களுடைய நன்றி உரித்தாகுக.

இந்நூலிற்கு நிதி உதவி அளித்த திருமலை திருப்பதி ஆலயதேவஸ்தான கமிட்டிக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

S. ஆழ்வான்
M. கோவிந்த ராஜன்

OM NAMO NARAYANAYA

## SYNOPSIS

# TIRUVENKATA TILAKAM

This book is a compilation of hymns from the Nalayira Divya Prabandam with meaning, in praise of the Supreme Lord, Sriman Narayana of Tirumala Hills. Alwars outpourings in lucid and chaste Tamil express their poignant love of Thiruvengadamudaiyan. The holy place is blessed with 204 hymns sung by 10 Alwars.

The tradition of reciting Alwar's hymns was in existence in Tirumala temple even before the advent of Sri Ramanuja. According to the Arayirapadi Guruparampara prabhava, during his first visit to Tirumala, Sri Ramanuja worshipped the Alwars at the foot of the hills. In Tirumala Ozhugu, there is a reference to Periya Tirumalai Nambi and Ananthalwan requesting Thiruvaranga-p-perumal Arayar of Srirangam to recite the hymns of Alwars in Devagana during Adhyayana Utsavam.

Alwars hymns are recited in the presence of Tiruvengadamudaiyan during Suprabhada seva, Thomala seva, Poolangi seva, Thirumanjana seva (Friday), Thirukalyana Utsavam, Rohini, Tiruvatirai, Sravana Utsavams (Monthly) Nitya Utsavam (40 days), Sri Jayanthi Utsavam, Vasanthotsavam, Pavitrotsavam, Deepotsavam (Karthigai), Dhanurmasa seva, Purattasi Brahmotsavam, Adhyayana Utsava, Pagal Paththu and Erappaththu.


Since the beginning of the 10$^{th}$ century, Sri Vaishnava Acharya had significantly contributed service through their visits to Tirumala. The place is hallowed, amongst others, by the visits of Yamunacharya, Tirukkatchi Nambi, Vedanta Desikar, Periyavachchan Pillai, Manavala Mammuni and Ramajuja.

The books is handy and is intended to help people who would love to drink deep the essence of bakthi by reciting the Prabandam during their visits to Tirumala. On one side of the page the original text is given and on the opposite side the corresponding consolidated meaning of each hymn is given. The left side numbering denotes the serial number and the right side numbering denotes the text number as per the original.

**ALWAR EMPERUMANAR JEER THIRUVADIGALLE CHARANAM**

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாயநம :



மணவாள மாமுனிகள் தனியன்

(அழகிய மணவாளன் அருளிச் செய்தது)

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

குருபரம்பரையின் தனியன்

(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

எம் பெருமானார் தனியன்

(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

யோநித்யம் அச்யுத பதாம் புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணித்ருணாயமேநே |
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ :
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||

நம்மாழ்வார் தனியன்

(ஆளவந்தார் அருளிச் செய்தது)

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி :
ஸர்வம் யதேவ நியமேந மதந் வயாநாம் |
ஆத் யஸ்யந : குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த் நா ||

ஸ்ரீ சைலேசர் என்பவர் திருவாய் மொழிப் பிள்ளை. அவர் மணவாள மாமுநிகளின் ஆசார்யர். அவருடைய கருணைக்கு இலக்காகியதையே மணவாள மாமுனிகளுக்குப் பெரிய பெருமையாகப் பெரிய பெருமாள் அருளிச் செய்தார். ஞானம், பக்தி முதலிய குணக்கடல் போன்றவர் வரவர முநி. யதிராஜரிடத்தில் அளவிலா அன்பு கொண்ட "அழகிய மணவாளர்" என்று பெயருடைய மணவாள மாமுனிகளை நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரிய : பதியை ஆதியிலும், ஸ்ரீமந்நாதமுனிகளையும் ஆளவந்தாரையும் நடுவிலும் எனது ஆசாரியனை அந்தத்திலும் உள்ள குரு பரம்பரையை வணங்குகிறேன்.

தன்னை அடைந்தவரை நழுவ விடாதவனுகிற ஸ்ரீமந்நாராயணனுடைய தங்கம் போன்ற இருதிருவடித்தாமரைகளில் அன்புடையவரும் மற்றவை களைப் புல்லுக்குச் சமமாக நினைத்தவரும் எனது ஆசாரியரும் பூஜிக்கத் தகுந்தவரும், கருணைக் கடலுமாகிய ஸ்ரீராமாநுஜருடைய திருவடிகளை சரணமாக அடைகிறேன்.

தாய், தந்தை, தாரம், தனயர், பெருஞ்செல்வம் முதலியவையாக இருப்பதும், வகுளமாலையால் அலங்கரிக்கப் பெற்றதுமான முதல்வரும், நம்முடைய கூடஸ்தருமாகிய சடகோபருடைய திருவடியிணையைத் தலையால் வணங்குகிறேன்.

## ஆழ்வார்கள் உடையவர் தனியன்
(ஸ்ரீ பராசர பட்டர் அருளிச் செய்தது)

பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீ பக்திஸார குலசேகரயோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

### பெரியாழ்வார்

1. சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்துசோதி பரந்தெங்கும் *
எத்தனை செய்யினும் என்மகன் முகம் நே ரொவ்வாய் *
வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக்கின்ற *
கைத்தலம் நோவாமே அம்பு லீ! கடிதோடிவா.
56

2. என்னிது மாயம் ? என்னப்பன் அறிந்திலன் *
முன்னைய வண்ணமே கொண்டு அளவாயென்ன *
மன்னு நமுசியை வானில் சுழற்றிய *
மின்னுமுடியனே ! அச்சோ வச்சோ வேங்கட வாணனே !
அச்சோ வச்சோ.
104

3. தென்னிலங்கை மன்னன் சிரம்தோள் துணி செய்து *
மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு *
எண்ணிலங்கு நாமத்தளவும் அரசென்ற *
மின்னலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா வேங்கட வாணற்கு
ஓர் கோல் கொண்டு வா. 180

4. மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்கு *
கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்புதுகிலவை கீறி *
நிச்சலும் தீமைகள் செய்வாய் ! நீள் திருவேங்கடத்து எந்தாய் ! *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய் 184

பூதத்தாழ்வாரையும், பொய்கையாழ்வாரையும், பேயாழ்வாரையும், பட்டர்பிரானையும், திருமழிசைப் பிரானையும், குலசேகரரையும், திருப்பாணாழ்வாரையும், தொண்டரடிப்பொடிகளையும், திருமங்கை மன்னனையும், ராமாநுஜரையும் நம்மாழ்வாரையும் தினமும் வணங்குகிறேன்.

1. சந்திரனே ! உன் ஒளி வெள்ளத்தை மண்ணுலகம், விண்ணுலகம் எல்லா இடங்களிலும் பரவச் செய்து குளிர்ச்சியுடன் இருந்தாலும், என் மகன் கண்ணனின் முகத்துக்கு நீ இணையாக மாட்டாய். திருவேங்கடமலையில் எழுந்தருளியுள்ள திருவேங்கடவன் உன்னை அழைக்கின்றான். அவனுடைய சிறுகைகள் வருந்தாதபடி அவனிடம் விரைந்து ஓடி வா. 56

2. "என் தந்தை மாவலி உன்னுடைய மாயத்தை அறியவில்லை. நீ வந்த குறளுருவிலேயே மூவடி மண்ணை அளந்து கொள்ள வேண்டும்" என்று மாவலியின் மகன் நமுசி கண்ணனிடம் சொன்னான். கண்ணன் அதற்குப் பதில் சொல்லியும் கேட்க மறுத்ததால், நமுசியை எம்பெருமான் வானிலே தூக்கி எறிந்து சுழலவிட்டான். ஒளி பெருகும் கிரீடத்தையுடைய முதலோனே ! அச்சோ வச்சோ : திருமலையிலே வாழுமவனே ! அச்சோ வச்சோ. 104

3. தென் இலங்கை அரசன் இராவணனின் தலைகளையும், தோள்களையும் துண்டித்து ஒளிமிக்க ஆபரணங்களை அணிந்த விபீஷணாழ்வானுக்கு, "என் பெயர் உலகில் ஒலித்துக் கொண்டிருக்கும் வரை நீயும் அரசாள வேண்டும்" என்று வாழ்த்தி அருளியவர்க்கு ஓர் கோல் கொண்டு வா ! திருவேங்கடவனுக்கு ஓர் கோல் கொண்டு வா! 180

4. வீட்டில் பெண்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் அணிந்துள்ள பட்டாடைகள் மேலாடைகள் முதலியவற்றைப் பிடித்து இழுத்து அவர்களிடம் தினமும் தீம்புகளைச் செய்யும் கண்ணபிரானே ! உயர்ந்த திருமலையில் எழுந்தருளியிருந்து அருள் செய்யும் எங்கள் தந்தையே! எங்களிடமுள்ள மருக்கொழுந்தையும் பாதிரிப்பூவையும் தலையில் சூட்டிக் கொள்ள நீ வந்தருள வேண்டும். 184

5. போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய்
போதரேனென்னாதே போதர் கண்டாய் *
ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும்பேச
நான் கேட்க மாட்டேன் *
கோதுகலமுடைக் குட்டனேயோ !
குன்றெடுத்தாய் ! குடமாடு கூத்தா ! *
வேதப் பொருளே ! என்வேங்கடவா ! வித்தகனே ! இங்கே போதராயே.
207

6. கடியார் பொழிலணி வேங்கடவா ! கரும்போரேறே ! * நீ யுகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே
போனாய் மாலே ! *
கடிய வெங்கானிடைக் கன்றின்பின் போன சிறுக்குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி * உன் கண்கள் சிவந்தாய்
அசைந்திட்டாய் நீ எம்பிரான்!
247

7. ** சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய் ! * உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ ! தாமோதரா ! சதிரா ! *
என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப் பொறியொற்றிக் கொண்டு*
நின்னருளே புரிந்திருந்தேன் இனிஎன் திருக்குறிப்பே !
463

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

## ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழி

8. **தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டு மாசி முன்னாள் *
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங்கரித்து அனங்கதேவா ! *
உய்யவு மாங் கொலோ வென்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன் *
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே. 504

5. 'கண்ணா ! இங்கே வா' என்று யசோதை அழைத்தாள். வரமாட்டேன் என்று சொல்லாமல் நீ வருவாயாக ! பிறர் வீட்டுப் பெண்கள் உன்னைப் புகழ்வது போல் ஆரம்பித்து, பின் தகாதவார்த்தை சொல்லும் போது என்னால் தாங்க முடியவில்லை. குன்றெடுத்து அனைவரையும் ரட்சித்தவனே. குடக் கூத்தாடியவனே ! மறைகளின் பொருளே என் வேங்கடவா ! என் அருகில் வந்திட வேண்டுகிறேன். 207

6. நறுமணம் நிறைந்த சோலை சூழ்ந்துள்ள திருவேங்கடமலையில் நின்றருள்பவனே ! போர் புரிவதில் வீரம் பொருந்திய ஏறுகள் போல் பெருமை கொண்டவனே ! நீ விரும்பும் குடை, செருப்பு, வேய்ங்குழல் முதலியவற்றை நான் கொடுக்க நீ வாங்கிக் கொள்ளாமல் கன்றுகளின் பின் சென்றாய். வெப்பம் மிகுந்த காட்டில் கன்றுகள் பின் சென்ற உன் செந்தாமரைத் திருவடிகள் கொப்பளித்தன. உன் கண்கள் சிவந்து, உடம்பு இளைக்கவும் பெற்றாய். 247

7. உயர்ந்த சிகரத்தையுடைய குளிர்ச்சி பொருந்திய திருவேங்கடமலையில் நின்ற வண்ணம் உலகம் அனைத்தையும் வாழ்விக்க சேவை தந்தருள்பவனே. தாமோதரனே ! அடியார்களுடைய குற்றங்களைக் காணாத பண்பை உடையவனே ! என்னுடைய ஆத்மாவுக்கும், சரீரத்திற்கும், உன்னுடைய திருவருளையே பலனாக எண்ணி விரும்பியுள்ளேன். உன்னுடைய திருவுள்ளக் கருத்து எதுவோ? அதை அறிய விரும்புகிறேன். 463

8. காமதேவனே ! கண்ணனே ! தை மாதம் முழுவதும் நீ வீற்றிருக்கும் இடத்தை நன்கு விளக்கி தூய்மைப்படுத்தினேன். மாசி முன் பகுதியில் அழகிய சிறிய மணலால் நீ வரும் தெருவை அழகுபடுத்தினேன். வாழ்வு பெறுவதற்கே உன்னையும் உன் தம்பியையும் வணங்கினேன். நெருப்பைக் கக்கும் சக்தியுள்ள திருச்சக்கரத்தைக் கையில் கொண்டுள்ள திருவேங்கடவனுக்கு அந்த ஏங்கைங்கர்யம் பண்ணும்படி விதிக்க வேணும். 504

9. மத்த நன்னறு மலர் முருக்கமலர் கொண்டு
முப்போதும் உன்னடி வணங்கி *
தத்துவமிலியென்று நெஞ்செரிந்து வாசகத்
தழித்து உன்னை வைதிடாமே *
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி *
வித்தகன் வேங்கடவாண னென்னும்
விளக்கினில்புக என்னை விதிக்கிற்றியே.

506

10. ** காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர் *
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன் *
ஓட்ட ராவந்து என் கைப்பற்றி * தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே !

535

11. வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக்காட்டான் *
உள்ளம் புகுந்து என்னைநைவித்து நாளும்
உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும் *
கள்ளவிழ் செண்பகப் பூ மலர்க்கோதிக்
களித்திசை பாடும் குயிலே ! *
மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாது என்
வேங்கடவன் வரக் கூவாய். 546

12. ** விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள் ! *
தெண்ணீர்பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானே ? *
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிச்சோரச் சோர்வேனை *
பெண்ணீர்மை யீடழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே

577

13. மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள் ! * வேங்கடத்துச்
சாமத்தினிறங் கொண்ட தாடாளன் வார்த்தை யென்னே ! *
காமத் தீயுள் புகுந்து கதுவப் பட்டு, இடைக்கங்குல் *
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நானிருப்பேனே. 578

9. காமனே ! நல்ல மணமுள்ள ஊமத்த, முருக்க மலர்களால் அருச்சித்து மூன்று வேளைகளிலும் உன்னுடைய திருவடிகளை வணங்குகின்றேன். அப்படி வணங்கியும் பயனைப் பெறாது இவன் பொய்யன் என்று நான் உன்னை வசைச் சொற்கள் கொண்டு ஏசாவண்ணம், கொத்தாக மலர்ந்துள்ள பூக்களை வில்லில் பூட்டி கோவிந்தன் என்ற புனிதப்பெயரை எழுதி வியக்கத்தக்க திருவேங்கடத்தான் என்னும் விளக்கினில் நான்சேரும்படி நீ உதவுவாயாக. 506

10. திருவேங்கட மாமலைக் காட்டிலும், திருக்கண்ணபுரம் என்னும் நகரத்திலும் மனக் குறையின்றி உள்ளம் உகந்து நித்யவாசம் செய்தருளுகிற வாமனவதாரம் செய்தருளிய எம்பெருமான் ஓடி வந்து என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டு தன் நெடியதிருமேனியோடு என்னை அணைத்துக் கொள்வானாகில் கூடலே ! நீ கூடுவாயாக. 535

11. வெண்மை நிறம் கொண்ட சங்கை தன் இடக்கையில் கொண்டுள்ள நிர்மலனை பெருமான் எனக்குத்தன் திருவுருவைக் காட்ட மாட்டேன் என்கிறான். ஆனால் நாள்தோறும் என் உள்ளம் புகுந்து என்னைத் துன்புறுத்தி, உயிர் தரித்திருக்கும்படி செய்து, நான் தவித்து ஆடி துன்பப்படுவதைப் பார்த்து இன்புறுகிறான். ஆகவே, குயிலே ! நீ எனக்காக திருமலையில் வந்து நிற்கிற எம்பெருமானை இங்கே வரும்படியாகக் கூப்பிட வேணும். 546

12. ஆகாசம் முழுவதும் நீல நிறமான மேற்கட்டி கட்டினாற்போல் படர்ந்துள்ள மேகங்களே ! தெளிந்த அருவி பாயும் திருவேங்கடத்தில் உள்ள என் திருமாலும் உங்களுடன் வந்தானோ ? நான் சிந்தும் கண்ணீர் துளி மார்பு நுனியில் படுமாறு வருந்துகின்ற என்னை என்னுடைய பெருமையைச் சிதைக்கின்ற இது அவருக்குப் பெருமையாகுமா? 577

13. சிவந்த முத்தையும் பொன்னையும் பொழிவிக்கின்ற பெரிய மேகங்களே! நீல நிறங் கொண்ட கருணை புரிவதில் ஆர்வமுடைய திருவேங்கடவனுடைய செய்தி ஏதேனும் உண்டோ ? காமத்தீ என் உள்ளம் புகுந்து கவ்விக் கொள்ள அதனால் துன்புற அதற்கு மேல் நள்ளிரவில் ஒரு தென்றல் காற்றுக்கும் நான் இலக்காகி இங்கு வாழ்ந்து இருக்க இயலுமோ ? 578

14. ஒளி வண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம் *
எளிமையால் இட்டு என்னை ஈடழியப் போயினவால் *
குளிரருவி வேங்கடத்து என்கோவிந்தன் குணம்பாடி *
அளியத்த மேகங்காள் ! ஆவிகாத்திருப்பேனே.
579

15. மின்னாகத் தெழுகின்ற மேகங்காள் ! * வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை தங்கிய சீர்மார்வர்க்கு *
என்னாகத் திளங் கொங்கை விரும்பித்தாம் நாள் தோறும் *
பொன்னாகம் புல்கு தற்கு என் புரிவுடைமை செப்புமினே.
580

16. வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள் ! * வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர்சிதறத் திரண்டேறிப் பொழி வீர்காள் ! *
ஊன் கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடலிடந்தான் *
தான் கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே.
581

17. சலங் கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில் காள்! * மாவலியை
நிலங் கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள் ! *
உலங் குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்து! *என்னை
நலங்கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே.
582

18. ** சங்கமா கடல் கடைந்தான் தண் முகில்காள் ! * வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம் *
கொங்கை மேல் குங்குமத்தின் குழம் பழியப் புகுந்து * ஒருநாள்
தங்கு மேல் என்னா விதங்குமென்று உரையீரே. 583

14. அருள் புரியும் மேகங்களே ! என் உடலின் ஒளியும், நிறமும், வளையல்களும், நெஞ்சம், உறக்கமும் ஆகிய இவை எல்லாம் நான் எளியவனாக இருப்பதால் என்னை அலட்சியம் செய்து என்னை விட்டுச் சென்று விட்டன அதனால் நான் பலத்தை இழந்து நிற்கிறேன். குளிர்ந்த அருவியுடைய திருமலையில் என் கண்ணபிரானின் திருக்கல்யாண குணங்களை வாயாரப் பாடிக் கொண்டு என்னைக் காத்துக் கொள்ள இயலுமோ ? 579

15. மின்னலைத் தோற்றுவிக்கும் மேகங்களே ! என் உடம்பிலுள்ள இள மார்புகளை என் எம்பெருமான் வேங்கடவன் அழகிய தன் மார்புடன் தழுவி மகிழ வேண்டும் என்பது எனது விருப்பம். அதைத் திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள தன் திருமேனியில் திருமகள் வீற்றிருக்கும் அழகிய மார்பையுடைய வேங்கடவனுக்கு நீ சொல்வாயாக ! 580

16. திருவேங்கட மலையில் தேன் நிறைந்த பூக்கள் சிதறும்படி திரண்டு உருண்டு வானத்தில் ஏறி மழையைப் பொழிகின்ற மேகங்களே ! கூரிய நகத்தினால் இரணியனது உடலைக் கிழித்த எம்பெருமான் என்னிடமிருந்து தான் கவர்ந்து கொண்ட வளையல்களை திருப்பித் தருவதாக இருந்தால் என் நிலையை அவருக்குச் சொல்லுங்கள். 581

17. குளிர்ந்த மேகங்களே ! மகாபலியிடமிருந்து பூமியை தானமாகப் பெற்றுக் கொண்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருமலையிலே பொழிகின்ற மேகங்களே ! கொசுக்கள் உண்ட விளாம்பழம் போல் என் உள்ளம் மெலியும்படி என்னுள்ளே புகுந்து என்னுடைய பெண்மையைப் பறித்துக் கொண்ட நாராயணனுக்கு என் துன்பத்தைத் தெரிவியுங்கள். 582

18. சங்குடைய பெருங்கடலைக் கடைந்த பெருமானின் திருமலையில் உலாவும் குளிர்ந்த மேகங்களே ! சிவந்த கண்களையுடைய திருமாலின் செவ்விய திருவடிகளின் கீழ் அடியேனின் விண்ணப்பம். எனது மார்புகளின் மீது பூசப் பெற்ற குங்குமக் குழம்புப் பூச்சு நன்றாக அழிந்து போகும்படி ஒருநாளாவது என்னை வந்து தழுவினால் தான் நான் உயிர் பிழைப்பேன் என்று அப்பெருமானிடம் கூறுவீர். 583

19. கார்காலத் தெழுகின்ற கார்முகில் காள் ! * வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப் பொருதவனார் பேர் சொல்லி *
நீர்காலத்து எருக்கினம் பழவிலை போல் வீழ்வேனை *
வார் காலத்து ஒருநாள் தம்வாசகம் தந்தருளாரே. 584

20. **மதயானை போலெழுந்த மாமுகில் காள் ! * வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் ! பாம்பணையான் வார்த்தை என்னே ! *
கதியென்றும் தானாவான் கருதாது * ஓர் பெண் கொடியை
வதை செய்தானென்னும் சொல்வையகத்தார் மதியாரே.
585

21. ** நாகத்தின ணையானை நன்னுதலாள் நயந்து உரைசெய் *
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம் *
போகத்தில் வழுவாத புதுவையர் கோன் கோதைதமிழ் *
ஆகத்து வைத்துரைப்பாரவர் அடியாராகுவரே.
586

22. பாடும் குயில்காள் ! ஈது என்னபாடல் ?* நல்வேங்கட
நாடர் நமக்கு ஒருவாழ்வு தந்தால் வந்து பாடுமின் *
ஆடும் கருளக் கொடியுடையார் வந்து அருள் செய்து*
கூடுவராயிடில் கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே.
601

23. மழையே ! மழையே ! மண் புறம் பூசி உள்ளாய் நின்று*
மெழுகு ஊற்றினாற்போல் ஊற்றுநல் வேங்கடத்துள் நின்ற*
அழகப்பிரானார் தம்மை என்னெஞ்சத்து அகப்படத்
தழுவி நின்று *என்னைத் ததைத்துக் கொண்டு ஊற்றவும்
வல்லையே? 604

ஆண்டாள் திருவடிகளே சரணம்

19. மழைக் காலத்தில் திருவேங்கட மலையில் தோன்றுகின்ற கறுத்த மேகங்களே ! போரிலே வெற்றி பெற்ற பெருமானைப் பாடிப் பரவி, அதனால் மழைக்காலத்து எருக்கம் பழங்கள் காம்புடன் முறிந்து விழுவது போல் ஒடிந்து விழுகின்ற எனக்கு ஒருநாளாகிலும் வந்து தம்முடைய ஒருவார்த்தையையாவது சொல்லமாட்டாரோ ? 584

20. திருவேங்கட மலையில் வாழும் மத யானைகள் போல் வானில் மேலெழுந்து பரவும் மேகங்களே ! திருவனந்தாழ் வானாகிய பாம்புப் படுக்கையில் கண் துயிலும் எம்பெருமான் வேங்கடவனின் வார்த்தை தான் யாது? அவன் எப்போதும் ரட்சகனாகயிருப்பவன். அதை மனதில் கொள்ளாமல், ஓர் பெண் பிள்ளையைக் கொன்றான் என்ற பழிச் சொல்லை இவ்வுலகத்தார் சொல்லமாட்டார்களா ? 585

21. பெரியாழ்வாருடைய மகள் ஆண்டாள் திருவனந் தாழ்வானைப் படுக்கையாக உடையவனான திருவேங்கடவனை நோக்கி ஆசையுடன் அருளிச் செய்த மேகத்தைத் தூது விடுவதாக அமைந்த இத்தமிழ்ப் பாசுரங்களை மனதில் பதித்து ஓதவல்லவர்கள் எம் பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் பண்ணப் பெறுவார்கள். 586

22. பாடுகின்ற குயில்களே ! நீங்கள் பாடும் பாடல் கேட்கமுடியாத தாக இருக்கிறதே. திருவேங்கட மலையையுடைய எம்பெருமான் எனக்கு வாழ்க்கையில் ஒருவழி வகுத்தால் அதன்பின் நீங்கள் பாடுவீராக ! உங்கள் பாட்டுக்கேற்றவாறு ஆடவல்ல கருடனைக் கொண்டுள்ள திருவேங்கடவன் என்னுடன் வந்து சேர்ந்திருந்தால் நாமே உங்களை அழைத்துப் பாடுமாறு சொல்லி உங்கள் பாடல்களைக் கேட்போம். 601

23. ஓ ! மழையே ! வெளிப்புறத்தில் மண்பூசும் முன்னர் மெழுகை உருக்கி ஊற்றினாற்போல என்னை அணைத்து உயிரை உருக்கி அழிப்பவராய், திருவேங்கடமலையில் நிற்கும் பெருமானை என் நெஞ்சிலே வைத்து இன்புற, நான் அணைக்கும்படி என்னை அவரோடே நெருக்கி வைத்து மழை பொழியும் வல்லமை பெற்றாயோ ? 604

## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த பெருமாள் திருமொழி

### (ஆழ்வார் திருவேங்கட மலையில் ஏதேனுமாக விரும்புதல்)

24. **ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன் *
ஆனேறுஏழ் வென்றான் அடிமைத்திறம் அல் லால்*
கூன்ஏறு சங்கம் இடத்தான்தன் வேங்கடத்து*
கோனேரிவாழும் குருகாய்ப் பிறப்பேனே. 677

25. ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ*
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்*
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்*
மீனாய்ப் பிறக்கும் விதியுடையெனாவேனே. 678

26. பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்*
துன்னிட்டுப் புகலரிய வைகுந்தநீள் வாசல்*
மின் வட்டச் சுடராழி வேங்கடக் கோன் தானுமிழும்*
பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறு வெனாவேனே.
679

27. ஒண்பவள வேலையுலவு தண்பாற் கடலுள் *
கண் துயிலும் மாயோன் கழிலி ணைகள் காண்பதற்கு*
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து*
செண்பகமாய் நிற்கும் திருவுடை யெனாவேனே. 680

28. கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து *
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்*
எம்பெருமான் ஈசன் எழில் வேங்கடமலை மேல்*
தம்பகமாய் நிற்கும் தவமுடையெனாவேனே. 681

24. நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்ள ஏழு எருதுகளை வென்ற எம்பெருமான் வேங்கடவனுக்கு அடிமைத் தொழில் ஆற்ற விரும்புவதைத்தவிர, செல்வம் பொருந்திய இம்மானிடப் பிறவியை நான் விரும்பவில்லை. வளைந்த வெண்சங்கை உடையவனின் திருவேங்கடமலையில் உள்ள ஏரியில் வாழும் நாரையாகப் பிறக்கக் கடவேன். 677

25. அழியாத செல்வத்தையுடைய அரம்பையர்கள் சூழ்ந்திருக்க விண்ணகரம், மண்ணகரம் இரண்டையும் நான் விரும்பவில்லை. தேன் பொருந்திய பூஞ்சோலை அமைந்த திருமலையிலுள்ள சுனையில் ஓர் மீனாகவாவது பிறக்கும் பேறு கிடைக்கக் கடவேன். 678

26. சிவனும், பிரமனும், இந்திரனும் நெருங்கி வந்தும் உள்ளே புகமுடியாத பூலோக வைகுண்டமாகிற திருவேங்கட மலையின் திருவாசலில் நிற்கின்ற நிலே. மின்னலை ஒத்த ஒளிபொருந்திய சக்கரப் படையையுடைய திருவேங்கடவன் வாய் நீரை உமிழ்கின்ற தங்க வட்டிலை கையில் ஏந்திக் கொண்டு நான் உள்ளே புகும் பாக்கியத்தை யாவது பெறக் கடவேன். 679

27. ஒளி பொருந்திய பவளங்களைக் கரையில் சேர்க்கும் குளிர்ந்த திருப்பாற் கடலில் கண்வளரும் எம்பெருமான் திருவேங்கடவனின் இரண்டு திருவடிகளைச் சேவிக்கும் பொருட்டு இன்னிசை பாடும் வண்டுக் கூட்டங்கள் உள்ள திருவேங்கட மலையில் செண்பகப் பூவாய் இருக்கும் பேறாவது பெறக்கடவேன். 680.

28. மதங்கொண்ட யானையின் கழுத்தின் மீது பெருமையுடன் அமர்ந்து எல்லா இன்பங்களையும் அநுபவிக்கும் செல்வத்தையும் இந்த அரசாட்சியையும் நான் விரும்பமாட்டேன். எம்பெருமானுடைய அழகிய திருவேங்கட மலையில் புதராய் நிற்கும்படியான பேறு பெறக் கடவேன். 681

29. மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்*
அன்னவர்தம்பாடலொடும் ஆடலவை ஆதரியேன்*
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்*
அன்னனைய பொற்கு வடாம் அருந்தவத்தெனாவேனே. 682

30. வானாளு மாமதி போல் வெண்குடைக் கீழ் *மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்*
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல்*
கானாறாய்ப் பாயும் கருத்துடை யெனாவேனே. 683

31. பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்*
முறையாய பெரு வேள்விக் குறை முடிப்பான் மறையானான்*
வெறியார் தண் சோலைத் திருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையெ னாவேனே. 684

32. **செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே !*
நெடியானே ! வேங்கடவா ! நின்கோயிலின் வாசல்*
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்*
படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே. 685

33. உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழ்* உருப்பசி தன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்*
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்*
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. 686

34. **மன்னிய தண்சாரல் வட வேங்கடத்தான் தன்*
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி*
கொன்னவிலும் கூர்வேல் குலசேகரன் சொன்ன*
பன்னிய நூல் தமிழ்வல்லார் பாங்காய பத்தர்களே. 687

குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்

29. மின்னல் போன்ற நுண்ணிய இடையை உடைய ஊர்வசி, மேனகையின் ஆடல் பாடலை நான் விரும்ப வில்லை. வண்டுகள் 'தென்ன தென்ன' என்று ராகம் அமைத்துப் பாடும் திருவேங்கட மலையில் அசைவில்லாத பொற்சிகரமாகும் பெருந்தவத்தைப் பெறக் கடவேன். 682

30. நல்ல பிரகாசமுடைய முழு நிலவு போன்ற வெண் கொற்றக் குடையின் நிழலில் இருந்து பெரிய அரசனாக வீற்றிருந்து எல்லோராலும் கொண்டாடத் தக்க செல்வத்தை நான் ஒரு பொருளாகக் கருத மாட்டேன். தேன் பொருந்திய பூக்கள் அமைந்த திருவேங்கட மலையில் ஒரு காட்டாறாய்ப் பாயும் கருத்தை உடையவனாக ஆவேன். 683

31. பிறைச் சந்திரனை சடையில் தரித்துள்ள சிவனும், பிரமனும், இந்திரனும் செய்யும் பெரிய யாகங்களுக்குப் பயனாக அவர்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்பவனும் வேதங்களின் பரம்பொருளாகவே தோன்றுகின்ற எம்பெருமானுடைய குளிர்ச்சி பொருந்திய சோலை சூழ்ந்த திருவேங்கடமலை மேல் வழியாய்க் கிடக்கின்ற பேற்றினைப் பெறக் கடவேன். 684

32. செடிகள் போல அடர்ந்துள்ள கொடிய பாவங்களைப் போக்கி அருளும் திருமாலே ! திருவேங்கடவா ! உன் கோயிலின் வாசலில் உன்னை வணங்கும் அடியார்களும் தேவர்களும், ரம்பை முதலானோரும் ஏறி இறங்கும் படியாய்க் கிடந்து உன் பவளம் போன்ற திருவாயைக் காண மாட்டேனா ? 685

33. மேலுலகங்களை எல்லாம் ஒரு கொற்றக் குடையின் நிழலிருந்து அரசாட்சி செய்து ஊர்வசியின் அழகை அடைந்தாலும் அதை விரும்ப மாட்டேன். சிவந்த பவளம் போன்ற திருவாயை உடையவனும் 'திருவேங்கடம்' என்னும் மலையில் நின்று அருள்பவனுமாகிய மலை மேலே ஏதேனும் ஒரு பொருளாகப் பிறக்கக் கடவேன். 686

34. கூர்மையான வேலையுடைய குலசேகராழ்வார் நிலை பெற்ற குளிர்ச்சி பொருந்திய சாரல்களை உடைய திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள பெருமானது திருவடிகளைத் தொழுது இயற்றிய இத்தமிழ்ப் பாசுரங்களைக் கற்று வல்லவர் அப்பெருமான் திருவுள்ளத்திற் கேற்ற இனிய பக்தர்களாகி விளங்குவர். 687

## திருமழிசைப் பிரான் அருளிச் செய்த திருச்சந்த விருத்தம்

(திருவேங்கடம் திருப்பதிக்குரியவை)

35. குன்றில் நின்று வானிருந்து நீள்கடல் கிடந்து *மண்
ஒன்று சென்ற தொன்றை யுண்டு அதொன்றி டந்து பன்றியாய்*
நன்று சென்ற நாளவற்றுள் நல்லுயிர் படைத்து அவர்க்கு*
அன்றுதேவமைத்தளித்த ஆதி தேவனல்லையே ? 799

36. **செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட *உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று*
எழுந்திருந்து தேன் பொருந்து பூம்பொழில் தழைக்கொழுஞ்*
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே ? 811

37. கடைந்து பாற்கடல் கிடந்து கால நேமியைக் கடிந்து*
உடைந்தவாலி தன் தனக்கு உதவ வந்து இராமனாய்*
மிடைந்த ஏழ் மரங்களும் அடங்க வெய்து *வேங்கடம்
அடைந்த மாலபாதமே அடைந்து நாளும் உய்ம்மினோ. 832

## நான்முகன் திருவந்தாதி

38. குறிப்பு எனக்குக் கோட்டியூர் மேயானை யேத்த*
குறிப்பு எனக்கு நன்மை பயக்க * வெறுப்பனோ ?
வேங்கடத்து மேயானை மெய் வினை நோய் எய்தாமல்*
தான் கடத்தும் தன்மையான் தாள். 2415

39. அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண*
இழைப்பன் திருக் கூடல் கூட *- மழைப்பே
ரருவிமணி வரன்றி வந்திழிய *யானை
வெருவியர வொடுங்கும் வெற்பு. 2420

35. எம்பெருமான் திருவேங்கட மலையிலே நின்றும் பரமபதத்திலே யிருந்து நீண்ட பாற்கடலில் கண்வளர்ந்தருளியவன். பூமியை அளந்து, அந்த பூமியை வயிற்றிலே வைத்துப் பாதுகாத்தவன். வராஹ அவதார மெடுத்து பூமியை பெயர்த்து எடுத்து மேலே கொண்டு வந்தவன். நல்ல உயிர்களையும் படைத்து அப்போது அந்த மனிதர்களின் குணங்களுக்குத் தக்கபடி அடையத்தக்க தேவதைகளை ஏற்படுத்தி இப்படிப் பல வகைகளில் நன்மை செய்தருளின பரம புருஷன் நீ அல்லவா ? 799

36. நன்கு பருத்து நீண்டு உயர்ந்துள்ள மூங்கில்கள், இரவில் பெய்யும் மூடு பனியால் தரையில் கிடந்து, பின் காலையில் சூரிய ஒளி படுவதால் உலர்ந்து மீண்டும் வானளாவ நிற்குமிடமான திருமலையில் நின்ற திருக்கோலம் கொண்டு சேவைதந்தருள்பவனும், அழகிய பூஞ்சோலை களையும் பெரியகுளங்களையும் கொண்டுள்ள திருக்குடந்தையில் கிடந்த நிலையில் அறிதுயில் கொள்ளும் ஆராவமுதன் நீயன்றோ ? 811

37. அமுதம் பெறுவதற்காகக் கடையப்பட்ட பாற்கடலில் பள்ளி கொண்டிருந்தும், கால நேமி என்னும் அரக்கனை அழித்து, இராமனும் அவதரித்து சுக்ரீவனுக்கு உதவி ஏழு மரங்களையும் துளைத்தவன் இப்போது திருவேங்கட மலையில் நிலைத்து நின்று அருள்புரிபவனை திருமாலின் திருவடியினை ஒன்றையே வாழ்நாள் முழுவதும் போற்றி நற்கதி பெற்றிருப்பீராக. 832

## நான்முகன் திருவந்தாதி

38. திருக்கோட்டியூரில் சேவை சாதிக்கும் எம்பிரானைப் போற்றித் துதிக்க எனக்கு எண்ணமுண்டு. நன்மைகளைப் பெறும் பொருட்டு திருவேங்கடத்து எம்பிரானைத் துதிப்பேன். சரீரம் காரணமாக வரும் கர்மமும், நோய்களும் என்னை வந்து அணுகாமல் காத்தருளும் இயல்புடைய எம்பெருமானின் திருவடிகளை மறப்பேனு ? 2415

39. திருவேங்கடத்தானை என் கண்கள் காண நான் அழைக்கின்றேன். இம்மலையில் மழைக் காலத்தில் பெரிய அருவிகள் மாணிக்கக் கற்களை திரட்டிக் கொண்டு விழும் போது, மாணிக்கங்களின் ஒளியை நெருப்பின் சுடர் என்று மயங்கி யானைகள் அஞ்சி நிற்கும். ஒளியை மின்னலென நினைத்து பாம்புகள் புற்றிலே சென்று மறையும். இத்திருமலையைக் கூட வேண்டுமென்று கூடல் இழைக்கின்றேன். 2420

40. வெற்பென்று வேங்கடம் பாடினேன் *வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்* கற்கின்ற
நூல் வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்*
கால்வலையில் பட்டிருந்தேன் காண். 2421

41. காணலுறு கின்றேன் கல்லருவி முத்து திர*
ஓணவிழ விலொலியதிர* - பேணி
வருவேங்கடவா ! என்னுள்ளம் புகுந்தாய்*
திருவேங்கட மதனைச் சென்று. 2422

42. சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை*
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் *என்றும்
கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்*
அடிக் கமல மிட்டேத்தும் அங்கு. 2423

43. மங்குல் தோய்சென்னி வட வேங்கடத்தானை *
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான் *- திங்கள்
சடையேற வைத்தானும் தாமரை மேலானும்*
குடையேறத்தாங்கு வித்துக் கொண்டு. 2424

44. கொண்டு குடங்கால் மேல் வைத்த குழவியாய்*
தண்ட வரக்கன் தலைதாளால் - பண் டெண்ணி*
போம்குமரன் நிற்கும் பொழில் வேங்கட மலைக்கே*
போம் குமரருள்ளீர் ! புரிந்து. 2425

45. புரிந்து மலரிட்டுப் புண்டரீகப்பாதம்*
பரிந்து படுகாடு நிற்ப* - தெரிந்தெங்கும்
தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே*
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. 2426

40. மலை யென்று சொல்ல முற்பட்டு திருவேங்கடத்தானின் திருமா மலையைத் துதித்துப் பாடினேன். இதனால் எனக்கு வீடு பேறு உறுதியாகக் கிடைக்குமென்று நின்றேன். என் சிறிய சொல்லுக்குப் பெரிய பேறு எப்படி என்று ஆராய்கின்றேன். வேத வலையில் அகப்பட்டுள்ள எம்பெருமான் பெரிய பிராட்டியின் நாயகனுவான். அவனுடைய திருவடிகள் என்னும் வலையில் நான் முன்னமேயே அகப்பட்டு அவனையே கருதியிருப்பவனாயுள்ளேன். 2421

41. திருவேங்கடத் தெம்பெருமானே ! என் உள்ளம் புகுந்து நிலை பெற்றிருப்பவனே ! ஒலிக்கின்ற அருவி முத்துக்கள் உதிர்க்க, திருவோணத்திருநாளில் அடியார்களது வாழ்த்தொலி மிகும்படியு மிருக்கும் திருவேங்கட மலையை அடைந்து கண்டு மகிழ விருப்பமாயுள்ளேன். 2422

42. தன்னை வணங்கும் அடியார்களின் தீவினைகளை அழித்து அருள்புரிவதால், தாமரையில் பிறந்த பிரமனும், முக்கண்ணனான சிவபெருமானும் அங்கு எக்காலத்திலும் அந்தத் திருமலை எம்பெருமானது திருவடிகளில் தாமரை மலர்களைத் தூவித் துதித்துக் கொண்டிருப்பர். 2423

43. மேக மண்டலம் வரையில் உயர்ந்த சிகரத்தையுடைய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு சிவபிரானும், நான்முகனும் குடை, சாமரம் முதலான பொருள்களை எல்லாம் சேகரித்துக் கொண்டு திருக்காப்பு சமர்ப்பித்தற் பொருட்டு இரவில் திருமலைக் கோயிலுக்குச் செல்வார்கள். 2424

44. இளைஞர்களே ! இராவணன் வரம் வேண்டி நின்ற போது பிரமன் மடியில் குழந்தையாக இருந்த எம்பெருமான் இராவணனுக்கு வரம் கொடுக்கலாகாது என்றும், அவன் தண்டிக்கத் தகுந்தவன் என்றும் விளக்க, அவனுடைய பத்துத்தலைகளையும் தன் திருவடியால் கீறிக் காட்டியவன் வேங்கடவனாவான். நித்திய குமரனாக இருக்கும் இப்பெருமானின் தலமான திருமலைக்கே ஆசையுடன் செல்லுங்கள். 2425

45. பெருமானின் தாமரைப் பூ போன்ற திருவடிகளிலே அடியார்கள் மலர்களைச் சேர்த்து வணங்கி வழிபடுகிறார்கள். அடியார்கள் தன்னை எல்லா இடங்களிலும் காணலாம் படிக்குத் தானாகவே தோன்றி நின்றிருக்கும் நிலையில் சேவை தந்தருளும் திருவேங்கட மலையே நித்திய சூரிகளுக்கும் இவ்வுலகில் உள்ளவர்களுக்கும் நிதியாகும். 2426

46. வைப்பன் மணிவிலக்கா மாமதியை *மாலுக்கென்று
எப்பொழுதும் கைநீட்டும் யானையை* - எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே *
நாடு வளைத்தாடு மேல் நன்று. 2427

47. நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்*
பொன் மணியும் முத்தமும் பூமரமும் *- பன்மணி நீ
ரோடு பொருதுருளும் கானமும் வானரமும்*
வேடுமுடை வேங்கடம். 2428

48. வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் *மெய்ம்மையால்
வேங்கடமே மெய் வினை நோய் தீர்ப்பதுவும் *வேங்கடமே
தானவரை வீழத் தன்னாழிப் படை தொட்டு*
வானவரைக் காப்பான் மலை. 2429

49. வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார் *வேங்கடத்தான்
பால் திருந்த வைத்தாரே பல் மலர்கள் *- மேல் திருந்த
வாழ்வார் வருமதி பார்த்து அன்பினராய் *மற்றவர்க்கே
தாழ்வாயிருப்பார் தமர். 2471

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதிபிரான்

50. **அமலனாதிபிரான் அடியார்க்கு என்னையாட் படுத்த
விமலன் *விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத் தம்மான்* திருக்
கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே. 927

46. குளிர்ந்த ஒளியைக் கொடுக்கும் சந்திரனை திருவேங்கடவனுக்கு மணிவிளக்காக வைப்பேன் என்று எண்ணி அச்சந்திரனைப் பிடிக்கத் தன் துதிக்கையை யானையானது உயரத் தூக்கிய படியே நிற்கும். இதனைப் பிடிக்க வேடர்கள் அங்கு சூழ்ந்து கொள்வர். அவ்வேடனை எதிர்க்கக் குறவர்கள் வில் விடுத்து நிற்பர். இத்தகைய திருமலையை அனைவரும் வந்து வணங்கினால் அதுவே நமக்கு நலம் பயப்பதாகும். 2427

47. யாளிகளும், சிங்கங்களும், பொன்னும், மாணிக்கங்களும், முத்துக்களும், பூத்த மரங்களும் பலபல மணிகள் அருவிகளோடே கலந்து உருண்டு விழும் காடுகளும், அந்தக் காடுகளில் உள்ள வானரங்களும் , வேடர் இனங்களும் உடையன திருவேங்கட மலை. நீல ரத்னம் போல் வடிவையுடையனான பெருமானின் தலமாகும் இது. 2428

48. நித்திய சூரிகள் தொழு தேத்துகின்ற திருப்பதி திருவேங்கட மலையாகும். போக்கிக் கொள்ள முடியாத பாவங்களையும், உடலில் உண்டாகின்ற பிணிகளையும் போக்கடிக்க வல்லது திருவேங்கட மலையே ; அசுரர்கள் மாள தனது திருச்சக்கரத்தைக் கையில் ஏந்தி, தேவர்களைக் காத்தருள்கின்றவன் இருப்பது திருவேங்கட மாமலையாகும். 2429

49. இவ்வுலகில் பெருமை தோன்ற வாழ்ந்து பரம பதத்தை ஆள விரும்புபவர்கள் திருவேங்கடத்தான் பக்கலில் பலவகைப்பட்ட மலர்களால் தூவுகின்ற அடியார்கள் ஆவர். எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் ஓடும் கருத்தை நன்கு உணர்ந்து பக்தி பெருகியவர்களாய் அந்த எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருப்பவர் களிடத்துப் பரிவும் பக்தியும் கொண்டவர்கள் முதலில் சொல்லப்பட்டவர் களைக் காட்டிலும் சிறந்தவர்களாக வாழ்வர். 2471

50. பரிசுத்தனும், ஆதிப்பிரானாய், தன்னடியார்க்கு என்னை அடியனாக்கியவனும், நித்திய சூரிகளுக்குத் தனி நாயகனா யிருப்பவனும், நறுமணம் மிகுந்த சோலைகளால் சூழப்பட்ட திருவேங்கட மலையில் நின்று அருள்பவனும், நீண்ட மதிள்களையுடைய திருவரங்கத்திற்கு நாயகனுமான திருவரங்கப் பெருமானின் திருவடித் தாமரைகள் தாமாகவே வந்து என் கண்ணுக்குள்ளே புகுந்தது போலிருந்தது. 927

51. **மந்திபாய் வட வேங்கட மாமலை *வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத்தர வினணையான்*
அந்திபோல் நிறத்தாடையும் அதன் மேலயனைப்
படைத்ததோ ரெழில்*
உந்தி மேல தன்றோ அடியேனுள்ளத் தின்னுயிரே. 929

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி

52. **கொங்கலர்ந்த மலர்க்குருந்தம் ஒசித்த கோவலன் எம்பிரான்*
சங்கு தங்கு தடங்கடல் துயில் கொண்ட தாமரைக் கண்ணினன்*
பொங்கு புள்ளினை வாய் பிளந்த புராணர் தம்மிடம் *பொங்கு நீர்ச்
செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே!
1018

53. **பள்ளியாவது பாற்கடல் அரங்கம் இரங்கவன் பேய்முலை*
பிள்ளையாய் உயிருண்ட எந்தை பிரானவன் பெருகுமிடம்*
வெள்ளியான் கரியான் மணிநிற வண்ண னென் றெண்ணி
நாள் தொறும்*
தெள்ளியார் வணங்கும் மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே !
1019

54. நின்ற மா மருது இற்று வீழ நடந்த நின்மலன் நேமியான்*
என்றும் வானவர் கைதொழும் இணைத்தாமரையடி யெம்பிரான்*
கன்றி மாரி பொழிந்திடக் கடிதா நிரைக்கு இடர்நீக்குவான்*
சென்று குன்ற மெடுத்தவன் திருவேங்கடம் அடை நெஞ்சமே !
1020

51. என் ஆத்மாவானது வானரங்கள் வாழுமிடமான திருமலையில் நித்திய சூரிகள் பூக்களைக் கொண்டு ஆராதிக்கும்படி நிற்பவனும், திருவரங்கத் திருப்பதியிலே திருவனந்தாழ்வனுகிற படுக்கையை உடையவனுன திருவரங்கனின் அழகிய பீதாம்பரத்தின் மேல் பிரமனைப் படைத்த அழகிய திருநாபிக் கமலமும் ஆகிய இவற்றின் மீது நிலைத்து இருக்கின்றது. 929

52. நறுமணம் நிறைந்த மலர்கள் பூத்த குருந்தமர உருவத்தில் வந்த அரக்கனை அழித்த கோபலனும், சங்குகள் உறையும் பெரிய கடலில் அறிதுயில் கொள்ளும் தாமரைக் கண்களையுடையவனும், பகாசுரனை அழித்தவனுமாகிய நாராயணன் எழுந்தருளி இருக்கின்ற திருமலை, செங்கயல் மீன்கள் களித்து மகிழும் சுனைகள் நிறைந்த திருவேங்கடமாகும். என் நெஞ்சே ! நீ அங்கே சென்றடைவாயாக. 1018

53. பெருமாள் பள்ளி கொள்ளும் இடம் திருப்பாற் கடலும், திருவரங்கமும் ஆகும். அவன் வளருமிடம் திருவேங்கடம். கிருஷ்ணுவதாரத்தில் பூதனையின் உயிர் போகும்படி அவளது நஞ்சு தோய்ந்த கொங்கையில் வாய் வைத்துப் பாலைப் பருகியவனும், தெளிந்த ஞானியர்கள் அப்பெருமானை வெள்ளியான், கரியான், நீலமணிவண்ணன் என்று வணங்கிப் போற்றும் அவனிருக்கும் அந்தத் திருவேங்கட மலையை நெஞ்சே ! நீ அடைந்திடு. 1019

54. ஓங்கி வளர்ந்து நின்ற பெரிய மருத மரங்கள் முறிந்து விழும்படியாக உரலுடன் தவழ்ந்து சென்றவனும், திருவாழியைக் கையில் உடையவனும், நித்யசூரிகள் தொழும் தாமரை போன்ற இரண்டு திருவடிகளையுடையவனும், நமக்கு நல்வருள் புரியும் எம்பிரானும், இந்திரன் கல்மழை பொழிந்தபோது கோவர்த்தன மலையைத் தூக்கி பசுக் கூட்டங்களைக் காத்தவனுமான எம்பிரான் எழுந்தருளியுள்ள திருவேங்கடமாமலையை நெஞ்சே ! நீ சென்று அடைவாயாக. 1020

55. **பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு வென்ற பரஞ்சுடர்*
கோத்து அங்கு ஆயர் தம்பாடியில் குரவை பிணைந்த எம்கோவலன்*
ஏத்துவார் தம் மனத்துள்ளான் இடவெந்தை மேவிய எம்பிரான்*
தீர்த்த நீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடம் அடைநெஞ்சமே !
1021

56. வண் கையான் அவுணர்க்கு நாயகன் வேள்வியில்
சென்று, மாணியாய்*
மண் கையால் இரந்தான் மராமர மேழும் எய்த வலத்தினான்*
எண் கையான் இமயத் துள்ளான் இருஞ்சோலை மேவிய எம்பிரான்*
திண் கைம்மா துயர்தீர்த்தவன் திருவேங்கடம் அடை நெஞ்சமே !
1022

57. எண் திசைகளும் ஏழுலகமும் வாங்கிப் பொன் வயிற்றில் பெய்து*
பண்டு ஓராலிலைப் பள்ளி கொண்டவன் பால்மதிக்கு
இடர் தீர்த்தவன்*
ஒண்திறல் அவுணன் உரத்துஉகிர் வைத்தவன் ஒள்ளெயிற்றொடு*
திண் திறல்அரியாயவன் திருவேங்கடம் அடை நெஞ்சமே !
1023

58. பாரும் நீர்எரி காற்றினோடு ஆகாசமும் இவை யாயினான்*
பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகுமிடம்*
காரும் வார்பனி நீள் விசும்பிடைச் சோருமா முகில் தோய்தர*
சேரும் வார் பொழில் சூழ் எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே.
1024

59. அம்பரம் அனல் கால்நிலம் சலமாகி நின்ற அமரர் கோன்*
வம்புலா மலர் மேல் மலிமட மங்கை தன் கொழுநனவன்*
கொம்பினன்ன இடைமடக்குறமாதர் நீளி தணைந்தொறும்*
செம்புனம் மவைகாவல் கொள் திருவேங்கடம் அடைநெஞ்சமே.
1025

55. பஞ்ச பாண்டவர்களுக்காக பாரதப்போரை நடத்தி வெற்றி பெற்றவனும், திருவாய்ப் பாடியில் இடைச்சியர்களுடன் கைகோத்து குரவைக் கூத்து ஆடியவனும், தன்னை அன்புடன் வணங்கும் அடியார் மனத்துள் என்றும் தங்கியிருப்பவனும், திருவிடந்தையில் உறைபவனுமான எம்பிரான் எழுந்தருளியுள்ள திருவேங்கடமலையை நெஞ்சே ! நீ சென்று அடைவாயாக. 1021

56. மாவலியின் யாகத்தில் சென்று வாமனனாய் மூன்று அடி மண் வேண்டி நின்றவனும், இராமபிரானாகத் தோன்றி மராமரம் ஏழினையும் துளைத்தவனும், திருப்பிரிதியில் இருப்பவனும் கஜேந்திராழ்வானின் துயரத்தை நீக்கியருளியவனுமாகிய வேங்கடவனின் திருமலையை நெஞ்சே ! நீ சென்று அடைவாயாக. 1022

57. ஊழிக் காலத்தில் எட்டுத் திசைகளையும், ஏழு உலகங்களையும், தன் திருவயிற்றில் வாங்கிப் பாதுகாத்து, ஓர் ஆலிலை மேல் பள்ளி கொண்டவனும், இரணியனின் மார்பைப் பிளந்தவனுமாகிய எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருவேங்கடத்தை நெஞ்சே ! நீ சென்று அடைவாயாக ! 1023

58. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களாகத் தோன்றியவனும், ஆயிரம் நாமமுடையவனும், பிறப்பிலியானவனும் ஆகிய எம்பெருமான் வசிக்குமிடமாகவும் கறுத்த மேகங்களும், பனித்துளியும் ஆகாயத்தில் இருந்து பொழிகின்ற மேகங்கள் தங்குகின்ற சோலை சூழ்ந்த திருவேங்கட மலையை நெஞ்சே ! நீ சென்று அடைவாயாக. 1024

59. ஆகாயம், தீ, காற்று, நிலம், நீர் ஆகியவற்றின் உள்ளே உறைபவனும், நித்திய சூரிகளின் தலைவனும், திருமகளின் கேள்வனுமாகிய எம் பெருமான் எழுந்தருளியுள்ள இடமாகவும் குறத்தியர் பரண்களிலிருந்து காவல் புரியும் நிலங்களைக் கொண்டதுமான திருவேங்கட மலையை நெஞ்சே ! நீ சென்று அடைவாயாக. 1025

60. பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லி நின்று, பின்னரும்*
பேசுவார் தமை உய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம்*
வாச மாமலர் நாறுவார் பொழில் சூழ்தரும் உலகுக்கெலாம்*
தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே!
1026

61. **செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடத்து உறை
செல்வனை*
மங்கையர் தலைவன் கலிகன்றி வண்தமிழ்ச் செஞ் சொல்மாலைகள்*
சங்கையின்றித் தரித்து உரைக்க வல்லார்கள் தஞ்ச மதாகவே.*
வங்கமா கடல் வையம் காவலராகி வானுலகாள்வரே. 1027

62. **தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்*
நோயேபட்டொழிந்தேன் நுன்னைக் காண்பதோராசையினால்*
வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா!*
நாயேன் வந்தடைந்தேன் நல்கிஆ ளென்னைக் கொண்டருளே.
1028

63. மானேய் கண்மடவார் மயக்கில் பட்டு *மாநிலத்து
நானே நானா வித நரகம் புகும் பாவம் செய்தேன்*
தேனேய் பூம்பொழில் சூழ்திருவேங்கட மாமலை *என்
ஆனாய்! வந்தடைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே.
1029

64. கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்*
என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உரைத்தறியேன்*
குன்றேய் மேகம் அதிர் குளிர்மாமலை வேங்கடவா!*
அன்றே வந்தடைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே.
1030

60. எட்டு எழுத்து மஹாமந்திரத்தை எப்போதும் சொல்லுமவர்களை நற்கதி அடையும்படி ஏற்றுக் கொண்டு, அவர்களின் பிறப்பை நீக்குகிற வனுமான எம்பெருமான் எழுந்தருளியுள்ள இடமாகவும், பெரிய சோலைகளால் சூழப்பட்டு எல்லா உலகங்களுக்கும் ஒளி அளிப்பதாகவும் உள்ள திருவேங்கடமாமலையை நெஞ்சே ! நீ சென்றடைவாயாக. 1026

61. செந்நிற மீன்கள் துள்ளி விளையாடும் நீர்ச்சுனைகள் சூழ்ந்த திருவேங்கட மலையில் எழுந்தருளி இருக்கும் திருவேங்கடவனைப் பற்றி திருமங்கை நகர்த் தலைவன் கலியன் அருளிய தமிழ்ச் செஞ்சொல் மாலையை உரைக்க வல்லவர்கள் கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆண்ட பிறகு வானுலகையும் ஆள்வர். 1027

62. முங்கிற்புதர்களும், பூஞ்சோலைகளும் சூழ்ந்த திருவேங்கட மலையில் நின்று அருள் செய்யும் வேங்கடவனே ! தாய் தந்தை, மனைவி, மக்கள் என்ற உறவுகளையே பேசி உன்னைச் சிறிதேனும் எண்ணாமல் துன்பமே அடைந்தேன். உன்னைக் காண வேண்டுமென்ற ஆசையினுல் நீயே நிலையான உறவினன் எனக் கருதி உன்னைச் சரண் அடைந்தேன். கருணையுடன் என்னை ஆட் கொண்டருள வேண்டும். 1028

63. தேன் அதிகமாகவுள்ள பூஞ்சோலைகளால் சூழப்பட்ட திருமலையில் உள்ள ஆனை போன்ற எம்பெருமானே ! மான் போன்ற கண்ணையுடைய மங்கையரின் மோகவலையில் அகப்பட்டு பல வகையான நரகங்களை அநுபவிக்க வேண்டிய பாவங்களைச் செய்துள்ளேன். செய்த தவறுகளை நினைத்து வருந்தி இப்போது உன்னைத் தஞ்சமென வந்தடைந்தேன். அடியேனைக் காத்து ஆட்கொண்டருள்வாயாக ! 1029

64. குன்றுகளில் பொருந்திய மேகங்கள் முழங்குகின்ற திருவேங்கடமாமலையில் நின்று அருள்பவனே ! பல உயிர்களை இரக்கமின்றிக் கொன்றேன். இல்லை என்று வந்தவர்க்கு இனிதாக ஒரு வார்த்தையும் சொல்ல வில்லை. இப்போது மனம் திருந்தி உன்னைச் சரணடைகிறேன். அடியேனை ஆட் கொண்டருள்வாயாக ! 1030

65. குலந்தா னெத்தனையும் பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்*
நலந்தா னொன்று மிலேன் நல்ல தோரறம் செய்து மிலேன்*
நிலம் தோய் நீள்முகில்சேர் நெறியார் திருவேங்கடவா !*
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே
1031

66. எப்பாவம் பலவும் இவையே செய்து இளைத்தொழிந்தேன்*
துப்பா ! நின்னடியே தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்*
செப்பார் திண்வரை சூழ்திருவேங்கட மாமலை *என்
அப்பா ! வந்தடைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே.
1032

67. மண்ணாய் நீர் எரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம்*
புண்ணாராக்கை தன்னுள் புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன்*
விண்ணார் நீள் சிகர விரையார் திருவேங்கடவா !*
அண்ணா ! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே.
1033

68. தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்து மிட்டேன்*
பெரியேனாயினபின் பிறர்க்கே யுழைத்து ஏழையானேன்*
கரிசேர்பூம் பொழில் சூழ்கனமாமலை வேங்கடவா !*
அரியே ! வந்தடைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே.
1034

69. நோற்றேன் பல் பிறவி நுன்னைக் காண்பதோ ராசையினால்*
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன் எம்பெருமான் !*
கோல்தேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலை சூழ்வேங்கடவா !*
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே.
1035

70. பற்றேல் ஒன்றுமிலேன் பாவமே செய்து பாவியானேன்*
மற்றேலொன்றறியேன் மாயனே ! எங்கள் மாதவனே !*
கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச் சுனை வேங்கடவா !*
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே.
1036

65. மேகங்கள் நிறைந்த திருவேங்கடமலையில் எழுந்தருளி யிருப்பவனே! எத்தனையோ குலங்களில் பிறந்து இறந்து இளைத்துப் போய் பவதுன்பங்களையும் அநுபவித்தவனாக உள்ளேன். உன்றன் தாளிணை வந்தடைந்தேன். அடியேனை ஆட்கொண்டருள வேண்டுகிறேன். 1031

66. செப்புப் போன்ற உறுதியான மலைகளை அரண்களாகக் கொண்ட வேங்கடவனே ! எல்லாப் பாவங்களையும் செய்து அறிவற்று மெலிந்து சக்தியற்றுப் போனேன். என் பாவங்கள் நீங்கி நற்கதி அடைய உன் திருவடிகளைச் சரண் அடைந்தேன். அடியவனான என்னை ஆட் கொண்டருள்வாயாக. 1032

67. விண்ணளாவிய சிகரங்களையுடைய திருவேங்கடமலையில் நின்று அருள்பவனே ! ஐம்பூதங்களால் ஆகியதும் இரத்தமும், சீயும் நிறைந்துள்ள இவ்வுடலில் உள்ள புண்களினுல் வருந்தி துன்பத்தில் சிக்குண்டு மெலிந்து தளர்ந்தொழிந்தேன். எம்பெருமானே ! நீயே கதி என்று உன்னைச் சரணடைந்தேன். என்னை ஆட் கொண்டருள்வாயாக. 1033

68. யானைகள் அதிகம் உள்ள சோலைகள் சூழ்ந்த திருவேங்கட மலையில் நின்று அருள்பவனே ! ஒன்றும் அறியாத பாலகனாய் பல பாவங்கள் செய்தேன். வாலிப பிராயத்தில் பெண்கள் பலரிடம் அகப்பட்டு அவர்களுக்கு உழைத்து உடல் மெலிந்து சக்தியற்றுப் போனேன். இப்போது உன்னைச் சரண் அடைந்தேன். ஆட்கொண்டு அருள்வாயாக ! 1034

69. கொம்புத்தேன் பெருகும் சோலை சூழ்ந்த வேங்கடவனே ! தீவினைகள் பல செய்து பல பிறவிகளை அடைந்தேன். இப்பிறவியிலேயே உன்னைக் கண்ணாரக் கண்டு மகிழ பல நோன்புகள் நோற்று வந்தேன். பிறவி ஏற்படாமல் இருக்க உன்னைச் சரண் அடைந்தேன். நீ ஆட்கொண்டு அருள்வாயாக ! 1035

70. நன்மையைக் கொடுக்கும் செயல்களில் பற்று இல்லாதவனாய் பாவச் செயல்களையே செய்து பாவியாக உள்ளேன். நல்வழி ஒன்றும் தெரிய வில்லை. மலைத்தேன் சேரும் தாமரைக்குளங்கள் சூழ்ந்த திருவேங்கடமலையில் உறையும் பெருமானே ! வேறுகதி அற்றவனுனேன். நீயே கதி. என்னை ஆட்கொண்டு அருள்வாயாக. 1036

71. **கண்ணாய் ஏழுலகுக்கு உயிராய எங்கார் வண்ணனை*
விண்ணோர் தாம்பரவும் பொழில் வேங்கடவேதியனை*
திண்ணார் மாடங்கள் சூழ் திருமங்கையர் கோன் கலியன்*
பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்கு இல்லை பாவங்களே. 1037

72. **கண்ணார் கடல்சூழ் இலங்கைக்கு இறைவன் தன்*
திண்ணாகம் பிளக்கச் சரம் செல உய்த்தாய் !*
விண்ணோர் தொழும் வேங்கட மாமலை மேய*
அண்ணா ! அடியேனிடரைக் களையாயே. 1038

73. இலங்கைப் பதிக்கு அன்று இறையாய *அரக்கர்
குலம் கெட்டு அவர்மாளக் கொடிப் புள் திரித்தாய்!*
விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய*
அலங்கல் துளப முடியாய் ! அருளாயே. 1039

74. நீரார் கடலும் நிலனும் முழு துண்டு *
ஏரால மிளந்தளிர் மேல் துயில் எந்தாய் !*
சீரார் திருவேங்கட மாமலை மேய*
ஆராவமுதே ! அடியேற்கு அருளாயே. 1040

75. உண்டாய் உறிமேல் நறுநெய் அமுதாக*
கொண்டாய் குறளாய் நிலம் ஈரடியாலே*
விண்தோய் சிகரத் திருவேங்கடம் மேய*
அண்டா ! அடியேனுக்கு அருள்புரியாயே. 1041

76. தூணாய் அதனூடு அரியாய் வந்து தோன்றி*
பேணா அவுணனுடலம் பிளந்திட்டாய் !*
சேணார் திருவேங்கட மாமலைமேய*
கோணா கலையாய் ! குறிக்கொள் எனைநீயே. 1042

71. எல்லா உலகங்களுக்கும் கண் போன்றவனும், உயிராகவும் இருப்பவனும், நமக்காகவே மேக வண்ணத் திருமேனியுடன் சேவை தந்தருள்பவனும், வானவர்களும் இறங்கி வந்து போற்றி வணங்கப் படுபவனும் திருவேங்கடமலையில் நின்று அருள் பவனும் வேதங்களால் அறியப்படுபவனுமாகிய வேங்கடவனைப் பற்றி திருமங்கை மன்னனின் இந்தப் பத்துப்பாசுரங் களையும் பயில்பவர்கள் பாவங்கள் நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள். 1037

72. கடல் சூழ்ந்த இலங்கைக்கு மன்னனான இராவணனின் உறுதி வாய்ந்த மார்பினைப் பிளக்க அம்புகளைச் செலுத்திய இராம பிரானே! தேவர்கள் வந்து சேவிக்கும் திருமலையில் நின்றிருந்து அருள்பவனே ! அடியேன் துயரங்களைக் களைவாயாக. 1038

73. இலங்கையில் உள்ள அரக்கர் குலமே கெட்டு அடியோடு அழியும் படி கருடனை வாகனமாகக் கொண்டு சக்கராயுதத்தைச் செலுத்தியவனே! உயர்ந்த சிகரத்தையுடைய திருமலையில் வாழ்பவனே! திருத்துழாய் மாலையைத் திருமுடியில் அணிந்தவனே ! அடியேனின் துயர் நீக்கி அருள்வாயாக. 1039

74. நீர் நிறைந்த கடல்களையும், மண்ணுலகம் முழுவதையும் உட்கொண்டு திருவயிற்றுள் பாதுகாத்து வைத்திருந்து சிறுகுழந்தையாய் ஆலிலை மேல் துயில் கொண்டிருந்த என் தந்தையே! பெருமையுடைய திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! ஆராவமுதே ! அடியேனுக்கு அருள்வாயாக ! 1040

75. உறியில் வைத்திருந்த நெய்யை அமுதமாக உண்டவனே ! மாவலியிடம் வாமனனாய் மூன்றடி மண்வேண்டி ஈரடியால் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டவனே ! உயர்ந்த சிகரத்தை உடைய திருமலையில் வாழ்கின்ற பெருமானே ! அடியேனுக்கு அருள்வாயாக ! 1041

76. தூணிலிருந்து நரசிங்கமாய் வெளிப்பட்டு இரணியனின் உடலை தன் நகத்தால் கிழித்தெடுத்த சிங்கப்பிரானே ! திருவனந்தாழ்வானின் மேல் பள்ளி கொள்ளும் பரமனே ! அடியேனுக்கு அருள்வாயாக. 1042

77. மன்னா இம்மனிசப் பிறவியை நீக்கி*
தன்னாக்கித் தன் இன்னருள் செய்யும் தலைவன்*
மின்னார் முகில் சேர் திருவேங்கடம்மேய*
என்னானை என்னப்பன் என்நெஞ்சிலுளானே. 1043

78. மானேய் மடநோக்கி திறத்து எதிர்வந்த *
ஆனேழ் விடை செற்ற அணி வரைத்தோளா !*
தேனே ! திருவேங்கட மாமலைமேய *
கோனே ! என் மனம் குடி கொண்டிருந்தாயே. 1044

79. சேயன் அணியன் என சிந்தையுள் நின்ற
மாயன்* மணி வாளொளி வெண் தரளங்கள்*
வேய் விண்டு உதிர் வேங்கட மாமலை மேய*
ஆயனடி யல்லது மற்றறியேனே. 1045

80. வந்தாய் என்மனம் புகுந்தாய் மன்னி நின்றாய் !*
நந்தாத கொழுஞ்சுடரே ! எங்கள் நம்பீ !*
சிந்தா மணியே ! திருவேங்கடம் மேய
எந்தாய் ! * இனியான் உன்னை என்றும் விடேனே.
1046

81. **வில்லார் மலி வேங்கட மாமலை மேய*
மல்லார் திரள்தோள் மணி வண்ணனம் மானை*
கல்லார் திரள்தோள் கலியன் சொன்ன மாலை*
வல்லாரவர் வானவ ராகுவர்தாமே. 1047

82. **வானவர் தங்கள் சிந்தைபோல என் நெஞ்சமே ! இனிது வந்து
*மாதவ
மானவர் தங்கள் சிந்தை அமர்ந்துறைகின்ற எந்தை*
கானவரிடுகாரகில் புகை ஓங்கு வேங்கடம் மேவி *மாண்குற
ளான அந்தணற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே.
1048

77. நிலையில்லாத இம்மானிடப் பிறவியை நீக்கி, தனக்குத் தொண்டனாக்கிக் கொண்டு இன்னருள் தரும் தலைவனும் மின்னலோடு கூடிய மேகங்கள் வந்து தங்கும் திருமலையில் வாழ்பவனும், ஆனை போன்ற பெருமை வாய்ந்தவனுமான எம் பெருமான் என் நெஞ்சில் எழுந்தருளி விட்டான். 1043

78. மான் போன்ற கண்களையுடைய நப்பின்னையை ஏற்பதற்காக செருக்குடன் வந்த ஏழு எருதுகளைக் கொன்ற மலை போன்ற தோள்களையுடையவனே! தேன் போன்று எனக்கு இனியனே! திருவேங்கடமலையில் நின்று அருள்பவனே! என் உள்ளத்தில் குடி கொண்டு அருள் செய்தாயே. 1044

79. பக்தி இலாதவர்க்கு வெகு தொலைவிலும் பக்தி உள்ளவர்க்கு அருகில் இருப்பவனும் என் உள்ளத்தில் நிலை பெற்றிருக்கின்ற மாயனும், ஒளி சிந்தும் முத்துக்களையும் சிறந்த இரத்தினங்களையும் உதிர்க்கும் இடமாகிய திருமலையில் வாழும் கண்ணன் திருவடி தவிர வேறொன்றையும் அறியேன். 1045

80. எக்காலத்தும் நின்று ஒளி விளங்கும் சோதியே! எங்கள் குறையைத் தீர்ப்பவனே! திருவேங்கடத் திருமலையில் உறைபவனே! என் நெஞ்சில் நிலைத்து நிற்பவனே! உன்னை இனி என்றும் விட மாட்டேன். 1046

81. வேடர்கள் நிறைந்த திருவேங்கட மலையில் எழுந்தருளி இருப்பவனும், வலிமை பொருந்திய திரண்ட தோள்களை உடையவனும், நீலமணி போன்றவனுமான எம்பெருமானைப் பற்றி கலியன் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஓதுகிறவர்கள் நித்ய சூரிகளைப் போல் கைங்கர்யம் செய்வார்கள். 1047
(தமது நெஞ்சைப் புகழ்ந்து திருவேங்கடவனுக்கு அடிமைத் தொழில் பூண்டு கைங்கர்யம் செய்ய வந்ததாக ஆழ்வார் இப்பாசுரங்களில் கூறுகிறார்.)

82. என் நெஞ்சமே! மிகப் பெரிய தவஞ் செய்தவர்கள் மனத்தில் நிலைத்து வாழ்ந்தருளும் என் ஸ்வாமியாய் வேடர்கள் அகில் கட்டைகளை நெருப்பில் இடுவதால் புகை எங்கும் பரவுமாறு உயர்ந்த திருவேங்கடமலையில் உறையும் வாமனனாகிய அந்தணனாய் வந்த பெருமானுக்கு நீ கைங்கர்யம் செய்ய இசைந்தாய். 1048

83. உறவு சுற்ற மென்றொன்றிலா ஒருவன் உகந்தவர் தம்மை *
மண்மிசைப்
பிறவியே கெடுப்பான் அது கண்டு என் நெஞ்ச மென்பாய் !*
குறவர் மாதர் களோடு வண்டு குறிஞ்சி மருளிசை பாடும்
வேங்கடத்து*
அறவனாய கற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே. 1049

84. இண்டை யாயின கொண்டு தொண்டர்க ளேத்துவாருறவோடும் *
வானிடைக்
கொண்டு போயிடவும் அது கண்டு என் நெஞ்ச மென்பாய் !*
வண்டு வாழ்வட வேங்கடமலை கோயில் கொண்டதனோடும் *
மீமிசை
அண்ட மாண்டிருப்பாற்கு அடிமைத் தொழில் பூண்டாயே. 1050

85. பாவியாது செய்தாய் என் நெஞ்சமே ! பண்டு தொண்டு
செய்தாரை *மண்மிசை
மேவி ஆட்கொண்டு போய் விசும் பேற வைக்கும் எந்தை*
கோவி நாயகன் கொண்ட லுந்துயர் வேங்கட மலையாண்டு* வானவர்
ஆவியாயிருப்பாற்கு அடிமைத் தொழில் பூண்டாயே. 1051

86. பொங்கு போதியும் பிண்டியும் முடைப் புத்தர் நோன்பியர்
பள்ளியுள்ளுறை*
தங்கள் தேவரும் தாங்களுமேயாக என் நெஞ்சமென்பாய் !*
எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் வேங்கடம் மேவி
நின்றருள்*
அங்கணாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே. 1052

87. துவரியாடையர் மட்டையர் சமண் தொண்டர்கள் மண்டியுண்டு
பின்னரும்*
தமரும் தாங்களுமே தடிக்க என் நெஞ்சமென்பாய் !*
கவரிமாக்கணம் சேரும் வேங்கடம் கோயில் கொண்ட கண்ணார்
விசும் பிடை*
அமர நாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே. 1053

83. என் நெஞ்சம் எனப்படும் நீ ! இப்பெருமான் தனக்கு உறவினர், சுற்றத்தார் எவரும் இல்லாத பெருமை உடையவன். இவன் சிலரை விரும்பி, உலகத்தில் பாவத்தைப் போக்கி பிறப்பையும் போக்கி அருள்பவன். குறத்திகளும், தேன்பருகும் வண்டுகளும் சில பண்களைப் பாடுமிடமான திருவேங்கட மலையில் நின்றருளும் பெருமானுக்கு அடிமைப் பணி செய்வதை இப்பிறவியிலேயே கைக் கொண்டுள்ளாய். இது மிகவும் நல்ல செயலாகும். 1049

84. என் நெஞ்சம் என்ற மனமே ! மாலைகள் எனப் போற்றப் படுபவற்றை எடுத்துக் கொண்டு துதிக்கும் அடியார்களையும், அவரது உறவினர்களையும் இங்கு நின்றும் கொண்டு போய் பரமபதத்தில் வைப்பான் இப்பெருமான். இசை பாடும் வண்டுகள் வாழும் திருவேங்கடமலையைக் கோயிலாகக் கொண்டு அதனை பெருமையுடன் ஆண்டு வருகின்ற திருவேங்கடவனுக்கு நீ அடிமைத்தொழில் ஏற்று விளங்குகின்றாயே ! 1050

85. என் நெஞ்சே ! நீ தடுமாறாமல் நன்றே செய்தாய். முன்பு அடிமை செய்து போந்தவர்களை உய்விக்க, இங்கே அவதரித்து அவர்களை அடிமை கொண்டு, அவர்களுக்கு பரமபதம் வாழ்வளிக்கும் எம் தந்தையாயும், கோபிகளுக்கு நாயகனாகவும், மேக மண்டலத்தைத் தாழ்த்துகின்ற உயர்ச்சியையுடைய திருவேங்கட மலையை ஆண்டு நித்திய சூரிகளுக்கு உயிராக இருப்பவனான திருவேங்கடவனுக்கு அடிமைத் தொழில் பூண்டாய். 1051

86. புத்தர், சமணர்களின் நெறியில் மயங்கி அகப்படாமல், நாலா பக்கங்களிலும் தேவர்களும் அசுரர்களும் நெருங்கித் துதி செய்யும் திருமலையில் நின்றவடிவில் திருவருள் நல்கும் அழகிய கண்களையுடைய திருவேங்கடவனுக்கு அடிமைத் தொழில் ஏற்று விளங்குகின்ற என் நெஞ்சமே ! என்று சொல்லி ஆழ்வார் நெஞ்சைப் பாராட்டுகிறார். 1052

87. என் நெஞ்சமே ! காவியாடை உடுத்தியவரும், தலையை மொட்டை அடித்துக் கொண்டு திரியும் சமண மதத்தினர் ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து உண்டு தாங்களும் தங்கள் உறவினர் மட்டுமே கொழுத்து தடித்திருக்க இவர்களைப் பாராமல், கவரி மான்கள் கூட்டமாகச் சேர்ந்திருக்கும் திருவேங்கடத்தை வாழிடமாக உடையவனும், பரந்த பரமபதத்தில் நித்திய சூரிகளுக்குத் தலைவனான வனுக்கு அடிமைத் தொழில் பூண்டாய். 1053

88. தருக்கினால் சமண் செய்து சோறு தண் தயிரினால்
திரளை* மிடற்றிடை
நெருக்கு வாரலக் கணது கண்டு என் நெஞ்சமென்பாய் !*
மருட்கள் வண்டுகள் பாடும் வேங்கடம் கோயில்
கொண்டதனோடும் * வானிடை
அருக்கன் மேவி நிற்பார்க்கு அடிமைத் தொழில் பூண்டாயே.
1054

89. சேயன் அணியன் சிறியன் பெரியனென்பதும் சிலர் பேசக்
கேட்டிருந்
தேஎன் நெஞ்சமென்பாய் ! எனக்கு ஒன்று சொல்லாதே *
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி வேங்கட
மலை கோயில் மேவிய*
ஆயர்நாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே.
1055

90. கூடியாடியுரைத்ததே உரைத்தாய் என் நெஞ்சமென்பாய் !
துணிந்துகேள்*
பாடியாடிப் பலரும் பணிந்தேத்திக் காண்கிலர்*
ஆடுதாமரையோனும் ஈசனும் அமரர் கோனும் நின்றேத்தும் *
வேங்கடத்து
ஆடுகூத்தனுக்கு இன்று அடிமைத்தொழில் பூண்டாயே.
1056

91. **மின்னுமாமுகில் மேவுதண் திருவேங்கடமலை கோயில் மேவிய*
அன்னமாய் நிகழ்ந்த அமரர் பெருமானை*
கன்னி மாமதிள் மங்கையர் கலிகன்றி இன் தமிழாலுரைத்த* இம்
மன்னு பாடல் வல்லார்க்கு இடமாகும் வானுலகே.
1057

88. என் நெஞ்சமே நீ ! ஆதாரமற்ற வாதங்கள் பேசி சமண சமயத்தைக் கற்பனையால் தோற்றுவித்து தயிர் கலந்த சோற்று உருண்டைகளைக் கழுத்தை நெறிக்கும் வரை உண்டு இது ஒரு நோன்பு என்று உரைப்போரின் துன்பத்தைக் கண்டு வெறுத்து விலகி நின்றாய். வண்டுகள் மருளென்னும் இசையை ரீங்காரமிடும் இடமான திருவேங்கடமலையை தனக்கு உறைவிடமாக்கிக் கொண்டு மேலும் ஆகாசத்தில் சஞ்சரிக்கும் சூரியனுக்கு அந்தராத்மாவான வேங்கடவனுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே. 1054

89. என் நெஞ்சமே ! எம் பெருமானைப் பற்றிச் சொல்லும் போது சிலர் அவன் வெகு தொலைவில் உள்ளவன், சிலர் அவன் சமீபத்தில் இருப்பவன் என்றும், சிலர் அவன் சிறியன் என்றும், சிலர் அவன் பெரியன் என்றும் பலவாறாகச் சொல்லி அவன் நம்மால் பெற முடியாதவன் என்பர். நீ அவைகளை எல்லாம் கேட்டிருந்தும், அதனை ஒருபொருட்டாக மதியாமல், என்னிடமும் ஒன்றும் சொல்லாது மூங்கில்கள் வெண்ணிற முத்துக்களை மழைப் போல பொழிகின்ற திருவேங்கட மலையை இருப்பிடமாகக் கொண்டிருப்பவனும் ஆயர் தலைவனை பெருமானுக்கு அடிமைத் தொழில் பூண்டாய். 1055

90. என் நெஞ்சமே ! நான் சொல்லும் நல்லுரைகளை உறுதியாகக் கேட்பாயாக ! உலகில் பலரும் எம்பெருமானைப் பாடியும், ஆடியும், அடி பணிந்து வணங்கித் துதித்தும், அவனைக் கண்டிலர். யாவராலும் போற்றிக் கொண்டாடப்படுகின்ற தாமரையில் தோன்றிய பிரமனும், சிவபிரானும், இந்திரனும் துதித்துக் கொண்டு நிற்கும் திருவேங்கட மலையில் உறைபவனும், ஆயரிடையே குடக்கூத்து ஆடினவனை வேங்கடவனுக்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாய். 1056

91. மின்னலுடன் கூடிய பெரிய மேகங்கள் சேருகிற திருவேங்கட மலையில் நின்று அருள்பவனும் பிரமன் முதலிய தேவர்கட்கு கண் போன்ற வேதங்கள் மறைய அன்னமாய் வந்து அவற்றை மீட்டளித்தவனும், நித்ய சூரிகளுக்கு தலைவனுமான எம்பெருமான் வேங்கடவனைப் பற்றி திருமங்கை நாட்டின் தலைவரான கலிகன்றி என்ற ஆழ்வார் அருளிய இப்பத்துப் பாசுரங்களையும் பயில்பவர்க்கு பரமபதமே இருப்பிடமாகும். 1057

92. அன்றிய வாணனாயிரம் தோளும் துணிய அன்று ஆழிதொட்டானை*
மின் திகழ்குடுமி வேங்கட மலை மேல் மேவிய வேத நல்விளக்கை*
தென்திசைத் திலதமனையவர் நாங்கைச் செம் பொன்
செய்கோயிலினுள்ளே*
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை வணங்கி நான்
வாழ்ந்தொழிந்தேனே.
1275

93. **வேடார் திருவேங்கடம் மேய விளக்கே !*
நாடார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்*
சேடார் பொழில் சூழ் திருவெள்ளக் குளத்தாய் !*
பாடா வருவேன் வினையாயினபாற்றே.
1312

94. வாம்பரியுக மன்னர்தம் உயிர்செக ஐவர்கட்கு அரசளித்த*
காம்பினார் திருவேங்கடப் பொருப்ப ! நின்காதலை அருள் எனக்கு*
மாம்பொழில் தளிர்கோதிய மடக்குயில் வாயது துவர்ப்பெய்த*
தீம்பலங்கனித் தேனது நுகர் திருவெள்ளறை நின்றானே !
1371

95. **வெருவாதாள் வாய் வெருவி வேங்கடமே ! வேங்கடமே !
என கின்றாளால்*
மருவாளால் என்குடங் கால் வாள்நெடுங்கண் துயில் மறந்தாள்*
வண்டார் கொண்ட
லுருவாளன் வானவர்தமுயிராளன் ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட
திருவாளன் *என் மகளைச் செய்தனகள் எங்ஙனம் நான்
சிந்திக்கேனே?
1388

92. 'வாணனைத் தொலைத்த வீரன் இவன்' என்கிறார். போரில் வாணன் எதிர்த்து வந்த போது தனது சக்ராயுதத்தால் வாணனுடைய ஆயிரம் தோள்களையும் துணித்தவனும், ஒளி பொருந்திய சிகரங்களையுடைய திருவேங்கட மலையில் நிற்பவனும், வேதங்களால் போற்றப் பெற்று எங்கும் விளக்குப் போல் திகழ்பவனும் ஆகிய பெருமைகளையுடைய எம்பெருமானை நான் கண்டு வாழ்ந்த இடம் : தெற்குத் திசைக்குத் திலகம் போல் சிறப்புடையவர்கள் வாழும் நாங்கைச் செம்பொன் செய்கோயில். 1275

93. வேடர்கள் நிறைந்துள்ள திருவேங்கட மாமலையில் நின்று அருளும் விளக்கொளியே ! நாடு முழுதும் நிறைந்த புகழ் பெற்ற மறையவர்கள் நிலைத்து வாழும் திருநாங்கூரில் தளிர்கள் நிறைந்த சோலை சூழ்ந்த திருவெள்ளக்குளத்துள் உறையும் பெருமானே. உன்னைப் பாடி வருகின்ற என்னுடைய வினைகளை நீக்கியருள்வாயாக ! 1312

94. மாந்தோப்பில் தளிர்களையுண்ட அழகிய குயில்கள் தன்வாயில் துவர்ப்புரஸத்தைப் பெற்றதால் அதை மாற்றுவதற்காக மதுரமான பலாப்பழத்தின் சாற்றைச் சுவைத்துப் பருகுகின்ற திருவெள்ளறை என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியே ! போரில் எதிர்த்து வந்த குதிரைகள் மடியுமாறும் அரசர்களது உயிர்மாயுமாறும் பஞ்ச பாண்டவர்களுக்கு அரசை அளித்தவனே ! மூங்கில்கள் அடர்ந்த திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனே ! உனது அருளை எனக்குக் கொடுத்து கிருபை செய்ய வேணும். 1371

95. யாருக்கும் அஞ்சாத என் மகள் தன்னை அறியாமலேயே வாய் பிதற்றி 'திருவேங்கடமே, திருவேங்கடமே' என்கிறாள், இது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. என் அன்பு மகள் என் மடி மீது பொருந்தி அமர்பவளாயில்லை. அந்தோ ! வாள் போல் பரந்த கண்கள் உடைய என் மகள் உறக்கம் கொள்வதையே மறந்து விட்டாள். மேக வண்ணத் திருமேனியனும், நித்திய சூரிகளுக்கு உயிராயிருப்பவனும், திருப்பாற் கடலில் பிறந்த பெரிய பிராட்டியாரை தன் வல மார்பினில் உடையவனுன இவன் என் பெண்ணுக்குச் செய்தவைகளை எப்படி நினைப்பேன் ? 1388

96. சிந்தனையைத் தவநெறியைத் திருமாலை *பிரியாது
வந்து என் மனத்து இருந்த வடமலையை *வரிவண்டார்
கொந்தணைந்த பொழிற்கோவல் உலகளப்பான் அடி நிமிர்த்த
அந்தணனை* யான் கண்டது அணி நீர்த் தென்ன ரங்கத்தே.
1404

97. **மான் கொண்ட தோல்மார்வின் மாணியாய் *மாவலிமண்
தான் கொண்டு தாளாலளந்த பெருமானை*
தேன் கொண்ட சாரல் திருவேங்கடத்தானை*
நான் சென்று நாடி நறையூரில் கண்டேனே. 1518

98. ஆங்கு வெந்நரகத்து அழுந்தும் போது
அஞ்சேலென்று அடியேனை அங்கே வந்து
தாங்கு *தாமரையன்ன பொன்னாரடி
எம்பிரானை உம்பர்க் கணியாய் நின்ற*
வேங்கடத் தரியைப் பரிகீறியை
வெண்ணெயுண்டு உரலினிடை யாப்புண்ட
தீங்கரும்பினை *தேனை நன்பாலினையன்றி
என் மனம் சிந்தை செய்யாதே. 1572

99. எங்களுக்கு அருள் செய்கின்ற ஈசனை வாசவார் குழலாள்
மலைமங்கை தன்
பங்கனை *பங்கில் வைத்து கந்தான் தன்னைப் பான்மையைப்
பனி மாமதியம் தவழ்*
மங்குலைச் சுடரை வடமாமலை யுச்சியை நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை *பகலைச் சென்று நாடிக் கண்ண மங்கையுள்
கண்டு கொண்டேனே.
1640

96. எல்லா ஞானத்திற்கும் ஆதாரமாயிருப்பவனும், தவங்களின் நெறிகளுக்கு மூலகாரணனுயிருப்பவனும், திருவேங்கடத்தை விட்டு நீங்காமல் அங்கேயே நின்று, பின்பு அங்கு நின்றும் வந்து என் மனத்தகத்தே புகுந்து நித்யவாஸம் செய்பவனும், அன்றியும் சோலைகளால் சூழப்பட்ட திருக்கோவலூரில் உலகங்களை எல்லாம் அளப்பதற்காகத் திருவடிகளை நீட்டிய பெருமானை நான் நீரால் சூழப்பட்ட தென்னரங்கத்தில் காண பெற்றவனுனேன். 1404

97. மான் தோலைப் பூணூலில் கொண்டு திருமார்பிலே பூண்ட வாமனனுய் மகாபலியிடம் சென்று மூவடி மண் வேண்டி தன் திருவடியால் அளந்து கொண்ட பெருமானை, தேன் பெருக்கெடுத்தோடும் தாழ்வரைகளையுடைய திருவேங்கட மலையில் எழுந்தருளி யிருப்பவனை நான் தேடிச் சென்று நறையூரில் கண்டு கொண்டேன்.

1518

98. அங்கே கொடிய நரகத்தில் அழுந்தும் போது 'அஞ்சேல்' என்று அங்கு வந்து அடியேனைக் காப்பாற்றுபவனுய், தாமரை மலர் போலே அழகிய திருவடிகளையுடைய என் எம் பெருமான் : நித்திய சூரிகளுக்கு அணியாய் திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கும் சிம்மமாய், குதிரையாய் வந்த கேசி என்னும் அரக்கனின் வாயைப் பிளந்து நின்றவனும், கண்ணனுய் அவதரித்து வெண்ணெய் உண்டு, தாயால் கட்டுண்ணப் பண்ணியவனும், தித்திக்கும் கரும்பாகவும், இனிய தேனுகவும், ருசிக்கும் பாலாகவும் உள்ள எம்பெருமானைத் தவிர என் மனம் வேறு ஒன்றையும் நினையாது. 1572

99. எம்பெருமானின் உண்மை நிலையறிந்துள்ள எங்கட்கு அருள் செய்கின்ற சர்வேசுவரனை, மணங்கமழும் கூந்தலையுடைய மலைமகளை தனது மேனியில் பக்கத்திலேயுடைய சிவபிரானை தனது திருமேனியில் ஒரு பாகத்தில் வைத்து மகிழ்ந்தவனை, நற்குணம் மிகுந்தவரை, சந்திரன் தவழும் ஆகாசத்திற்கு அதிபதியாய், சூரியனுக்கு அந்தர்யாமியாய், திருவேங்கடமலையின் உச்சியில் எழுந்தருளி யிருப்பவனை, ஆசைப் படும் நம்மால் பற்றப்படுமவனை, இரவும், பகலும் ஆனவனுன அவனை நான் திருக்கண்ண மங்கையுள் கண்டு கொண்டேன். 1640

100. **அருவிசோர் வேங்கடம் நீர்மலையென்று வாய்
வெருவினாள் *மெய்யம் வினவி யிருக்கின்றாள்*
பெருகுசீர்க் கண்ணபுரமென்று பேசினாள்
உருகினாள் *உள்மெலிந்தாள் இதுஎன் கொலோ ?

1660

101. பண்ணுலா மென்மொழிப் பாவைமார் பனை முலையணைதும்
நாமென்று*
எண்ணுவாரெண்ணம தொழித்து நீ பிழைத்துயக் கருதினாயேல்*
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற வேங்கடத்து ளார் *
வளங்கொள் முந்நீர்
வண்ணனார் வல்லவாழ்சொல்லுமாவல்லையாய் மருவு நெஞ்சே !
1811

102. **வலம்புரி யாழி யனை வரையார் திரள் தோளன் தன்னை*
புலம்புரி நூலவனைப் பொழில்வேங்கட வேதியனை*
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ் சோலை நின்ற*
நலந்திகழ் நாரணனை நணுகுங் கொல் ? என் நன்னுதலே.

1836

103. **பொன்னை மாமணியை அணியார்ந்ததோர்
மின்னை *வேங்கடத்து உச்சியில் கண்டு போய்*
என்னை யாளுடை ஈசனை எம்பிரான்
தன்னை *யாம் சென்று காண்டும் தண்காவிலே. 1849

104. **சொல்லாய் பைங்கிளியே!*
சுடராழி வலனுயர்த்த*
மல்லார் தோள் வடவேங்கடவனை வர*
சொல்லாய் பைங்கிளியே !

1946

100. என் பெண், ''மலையருவிகள் பாய்கின்ற திருவேங்கடம்'' என்றும் ''திருநீர்மலை'' என்றும் தன்னையறியாமலேயே மொழிந்தாள். 'திருமெய்யம்' என்று கேட்டு விடையை எதிர் பார்த்திருக்கிறாள். பிறகு தானாகவே பெருமையும், சீர்மையும் நிறைந்த 'திருக்கண்ணபுரம்' என்று பேசினாள். நீராய் உருகி நின்றாள். நெஞ்சம் மெலிந்தவளானாள். 'என் மகளான இவள் செய்கைக்குரிய காரணம் எனக்குத் தெரிய வில்லை' - என்று தாய் கூறுவதாக இப்பாசுரம் அமைந்துள்ளது. 1660

101. நெஞ்சமே ! பண் போல் இனிய பேச்சையுடைய பெண்களின் பருத்த கொங்கைகளைத் தழுவி களிப்புறுவோம் என்று நினைப்பவர் களுடைய எண்ணத்தினின்றும் தப்பி நீ உயிர் வாழ்ந்திருக்கவும் கருதுவாயாகில் : நித்திய சூரிகளுக்குப் பரமபதத்தில் காட்சி கொடுப்பவனும், திருவேங்கட மலையில் உறைபவனும், வளம் மிக்க கடல் வண்ணத் திருமேனி படைத்த எம்பெருமான் உறையும் திருவல்ல வாழ் என்னும் திருப்பதியைப் பற்றிப் பேசுவதிலேயே வல்லமை பெற்று விளங்க விரும்புவாயாக. 1811

102. வலம்புரிச் சங்கையும், சக்கரத்தையும் ஏந்தி மலை போல் திரண்டுள்ள திருத்தோள்களையுடையவனும் இந்திரியங்கள் மயங்குமாறு பூணூல் அணிந்திருப்பவனும், சோலைகளால் சூழப்பட்ட திருவேங்கட மலையில் உறைபவனும், வேதத்தால் போற்றப்படுபவனும், சிலம்பாறு பாயும் திருமாலிருஞ்சோலை நின்றருள்பவனுமான நலமேவடிவான நாராயணனை என்னுடைய மகள் நெருங்க வல்லவளோ? 1836

103. பொன் போல் எல்லோராலும் விரும்பப் படுமவனை, விலை மதிக்க முடியாத மணி போலே சிறந்தவனை மின்னொளி போல் திகழ்பவனை திருவேங்கடத்து உச்சியிலே நேற்று சேவித்து, என்னை ஆட்கொண்ட ஸ்வாமியை, இன்று திருத்தண் காவிலே சென்று சேவிக்கக் கடவோம். 1849

104. பச்சை நிறமுள்ள சிறுகிளியே ! வலது கரத்தில் சுடரொளி வீசுகின்ற சக்கரத்தைக் கையில் பிடித்திருப்பவனும், வலிமை மிக்க திருத்தோள்களை உடையவனும் திருவேங்கட மலையிலே நின்றருளும் திருவேங்கடவன் வருமாறு அழைப்பாய். பைங்கிளியே. 1946

105. கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் *கைவளைகள்
என்னோ கழன்ற ? இவை என்ன மாயங்கள் ? *
பெண்ணானோம் பெண்மை யோம் நிற்க *அவன் மேய
அண்ணல் மலையும் அரங்கமும் பாடோமே. 1978

106. **கள்ளத்தால் மாவலியை மூவடி மண் கொண்டளந்தான்*
வெள்ளத்தான் வேங்கடத்தான் என்பரால் காணேடீ !*
வெள்ளத்தான் வேங்கடத்தானேலும்* கலிகன்றி
உள்ளத்தினுள்ளே உளன்கண்டாய் சாழலே !

2001

## திருக்குறுந்தாண்டகம்

107. இம்மையை மறுமைதன்னை எமக்கு வீடாகி நின்ற*
மெய்ம்மையை விரிந்த சோலை வியன்திருவரங்கம் மேய*
செம்மையைக் கருமை தன்னைத் திருமலை யொருமை யானை*
தன்மையை நினைவார் என் தன் தலைமிசை மன்னுவாரே.

2038

## திருநெடுந்தாண்டகம்

108. **நீரகத்தாய் நெடுவரை யினுச்சி மேலாய் !
நிலாத் திங்கள் துண்டத்தாய் ! நிறைந்த கச்சி
ஊரகத்தாய் ! *ஒண் துறை நீர் வெஃகா வுள்ளாய் !
உள்ளுவாருள்ளத்தாய் ! *உலகமேத்தும்
காரகத்தாய் ! கார் வானத்துள்ளாய் ! கள்வா !
காமருபூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய் ! *பேராது என்னெஞ்சிலுள்ளாய்
பெருமான் ! உன்திருவடியே பேணினேனே.

2059

105. கண்ணபிரான் என் மனத்துள்ளே நிலையாக இருந்தும் என் கைவளைகள் என்ன காரணத்தாலோ கழன்று போயின. இவையெல்லாம் என்ன ஆச்சரியமோ ? பெண்ணாகப் பிறந்த நாம் நம்முடைய பெண்மையைக் காத்து நின்றோம். இது இவ்வாறிருக்க, இப்பெருமான் விரும்பி இருந்து உவந்தருளும் திருவேங்கட மலையையும், திருவரங்கத்தையும் பாடுவோமா ? பாடுவோம் என்பது பொருள். 1978

106. ஒரு தோழி : மாவலியிடம் சூழ்ச்சியால் மூன்று அடி மண் பெற்று ஈரடியால் உலகளந்து திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்பவன். திருவேங்கடத்தில் நின்று அருள்பவனும் அவனே. அதற்கு இன்னொரு தோழி வெள்ளத்தான் வேங்கடத்தான் என்னும் திருப்பெயருடன் வெகு தொலைவில் இருந்தாலும் இவன் கலிகன்றி என்ற ஆழ்வாரது மனத்திலே வீற்றிருப்பதையும் காண்பாயாக ! 2001

107. இவ்வுலகில் நல்லறிவைத் தருகிறான் எம்பெருமான். சரீரம் நீத்த பிறகு மோட்சத்தில் கைங்கர்யத்தைத் தருபவன். நமக்கு மோட்சத்தை அளிக்கும் உபாயமும் இவனே. பரந்த சோலைகளால் சூழப்பட்டு திருவரங்கத்திலே என்றும் வாழ்பவன். சிவப்பு, கறுப்பு முதலான நிறங்களை அந்தந்த யுகங்களுக்கு ஏற்ப மேற்கொண்டு காட்சி தருகிறான். திருவேங்கட மலையிலே அனைவருக்கும் வேறுபாடு காணாமல் முகம் கொடுப்பவன். இவ்வாறு இயல்புடைய இந்த எம்பெருமானை நினைக்க வல்லவர்கள் என்னுடைய தலையிலே இருக்கத் தக்கவர்கள்.

108. திருநீரகத்தில் எழுந்தருளியிருப்பவனே ! உயர்ந்த திருவேங்கட மலையின் உச்சியில் எழுந்தருளியிருப்பவனே திங்கள் துண்டம் என்னும் திருப்பதி: கச்சி, திருவெஃகா, திருக்காரகம், முதலிய திருத்தலங்களிலே உறைபவனே! திருக்கார் வானத்தில் வாழ்பவனே ! என் நெஞ்சில் நீங்காது காட்சி அளிப்பவனே ! பல பல திருப்பதிகளை உடையவனே ! உனது திருவடிகளையே காண வேணுமென்னும் ஆசையால் கூப்பிடுகிறேன். 2059

109. வங்கத்தால் மாமணி வந்துந்து முந்நீர்
மல்லையாய் ! மதிள்கச்சி யூராய்! பேராய் !*
கொங்க (கு) த்தார் வளங் கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய் ! *பாற்கடலாய் ! பாரின் மேலாய் !
பனிவரையினுச்சி யாய் ! பவளவண்ணா !*
எங்குற்றாய் ? எம்பெருமான் ! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே.
2060

110. **கன்று மேய்த்து இனிது கந்தகாளாய் ! என்றும்
கடிபொழில் சூழ் கணபுரத்து என்கனியே ! என்றும்*
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் ! என்றும்
வட திருவேங்கடம் மேய மைந்தா ! என்றும்*
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே ! என்றும்
விரிபொழில் சூழ்திருநறையூர் நின்றாய்! என்றும்*
துன்றுகுழல் கருநிறத்து என்துணையே ! என்றும்
துணைமுலைமேல் துளி சோரச் சோர்கின்றாளே.
2067

## சிறிய திருமடல்

111. **சீரார் திருவேங்கடமே திருக்கோவ
லூரே * மதிட்கச்சி யூரகமே பேரகமே.* 2673 (69)

## பெரிய திருமடல்

112. என்னும் மலர்ப்பிணைய லேய்ந்த* - மழைக் கூந்தல்
தென்ன னுயர் பொருப்பும் தெய்வ வடமலையும். 2674 (6)

113. **தென்தில்லைச் சித்திர கூடத்து என் செல்வனை*
மின்னி மழை தவழும் வேங்கடத்து எம்வித்தகனை
2674 (124)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

109. அனைவரும் தொழுது உய்வதற்காகவே எம்பெருமான் திவ்ய தேசங்களிலே எழுந்தருளியிருக்கிறான். அவனை இழப்பது என்னுடைய பாவத்தினால் தானே தவிர, அதற்கு அவன் பொறுப்பல்ல. திருக்கடன்மல்லை திருப்பேர் நகர், முதலிய தலங்களில் உறைபவனே ! திருப்பாற்கடலுள் கண் வளர்ந்தருள்பவனே ! குளிர்ந்த திருவேங்கட மலையின் உச்சியில் எழுந்தருளியிருக்கும் என் ஸ்வாமியே ! உன்னைக் காண்பதில் உள்ள ஆர்வத்தால் நீ எங்குற்றாய் ! எங்குற்றாய் ? என்று திரிந்து அலைகின்றேன். நீ இருக்கும் இடத்தைக் காட்டி அருள்வாயாக! 2060

110. கண்ணபிரானாய் அவதரித்து கன்றுகளை மேய்த்து மகிழ்ந்த இளங்காளையே ! என்றும் சோலையால் சூழப்பட்ட திருக்கண்ணபுரம் என்ற திருத்தலத்தில் எனக்கு இனிமை தரும் பக்குவமான கனி போலே எழுந்தருளியிருப்பவனே ! திருவாய்பாடியில் நாற்சந்தியில் இருந்து குடக்கூத்தாடி மகிழ்பவனே ! வடக்கேயுள்ள திருவேங்கட மலையில் நின்று அருள்பவனே ! 'அரக்கர்களை வென்று அவர்கள் குலத்தை அழித்து வென்றவனே ! நெருங்கிய கூந்தலும், கறுத்த திருமேனியுடையவனாய் எனக்குத் துணைவனே ! என்று இவ்வாறு பலவாறாகக் கூறியவள் தனது ஸ்தனங்களிலே கண்ணீர்த்துளிகள் அருவி போல் பாயுமாறு மனந்தளருகின்றாள் என் மகள். 2061

111. யாவருக்கும் எளிதில் தன்னைக் காட்டிக் கொண்டு பெருமான் உறைகின்ற திருவேங்கடமே·திருக்கோவலூர், மதிள் சூழ்ந்த கச்சியில் திருவூரகம், திருப்பேரகம். 2673 (69)

112. திருவேங்கடத்தேவன் உரைந்தருளும், தெய்வத்தன்மை மிகுந்த வடக்கிலுள்ள திருவேங்கட மலையும். 2674 (6)

113. தென்திசையிலுள்ள தில்லைச் சித்திர கூடத்தில் உறையும் செல்வன் எனக்கு ஸ்வாமி. மேகங்கள் மின்னித் திரிகின்ற திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவன் எனக்கு உபகாரகன். 2674 (124)

## பொய்கையாழ்வார் அருளிச் செய்த முதல் திருவந்தாதி

114. எழுவார் விடை கொள்வார் ஈன்துழாயானை*
வழுவாவகை நினைந்து வைகல் - தொழுவார்*
வினைச் சுடரை நந்து விக்கும் வேங்கடமே* வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை.

2107

115. வகையறு நுண்கேள்விவாய்வார்கள் *நாளும்
புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தி *- திசை திசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே *வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்தவூர். 2118

116. ஊரும் வரியரவம் ஒண்குறவர் மால்யானை*
பேரவெறிந்த பெருமணியை* - காருடைய
மின்னொன்று புற்றடையும் வேங்கடமே* மேலசுரர்
எம்மென்னுமாலதிடம். 2119

117. இடந்ததுபூமி எடுத்ததுகுன்றம்*
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச* - கிடந்ததுவும்
நீரோதமாகடலே நின்றதுவும் வேங்கடமே*
பேரோத வண்ணர் பெரிது. 2120

118. பெருவில் பகழிக் குறவர் கைச் செந்தீ*
வெருவிப் புனம் துறந்த வேழம் *- இருவிசும்பில்
மீன் வீழக் கண்டு அஞ்சும் வேங்கடமே *மேலசுரர்
கோன் வீழக் கண்டு கந்தான் குன்று.

2121

114. எம்பெருமானின் அவதார காலத்தில் இல்லாதவர்களாகிய நமக்காக திருமலையில் பெருமான் உள்ளான்.

செல்வம் பெற எண்ணுபவர்க்கும் கைவல்யார்த்திகளுக்கும், இனிய திருத்துழாய் மாலை அணிந்த பெருமானைப் பிரியாமல் இருக்க தினந்தோறும் தொழுபவர்களுக்கும் அவன் திருமலையில் நின்று அருள் செய்கிறான். பாவமென்னும் தீவினையை அறவே நீக்கவல்லது திருவேங்கடம் ; நித்திய சூரிகளது திருவுள்ளமாகிற விளக்கைத் தூண்டி விளங்கச் செய்யும் இது. 2107

115. யாவரும் தன்னை பற்றுமாறு திருவேங்கடத்தில் பெருமான் உறைகின்றான். பல திசைகளிலுமிருந்து வந்திருந்து திருவேங்கடத்தை வணங்கும் சான்றோர் பலர் உள்ளனர். தினந்தோறும் பூ முதலிய பொருட்களுடன் வந்து எம்பெருமானை வணங்குகின்றனர், ஞானம் படைத்த பலர். முன் பாரதப் போரில் வெண்சங்கத்தை ஊதிய கண்ணபிரான் உவந்தருளிய பெருமையும் இத்தலத்திற்கு உண்டு.
2118

116. அழகிய குறவர்கள் பெரிய யானைகளை வயலிலிருந்து விரட்டும் பொருட்டு, பெரிய மாணிக்கக் கற்களை அதன் மேல் வீசுவர். இவை மேகத்தில் விளங்கும் மின்னல் எனப் பாம்புகள் தவறாக எண்ணி பயந்து புற்றில் நுழையும் அத்தகைய திருமலையானது நித்திய சூரிகளால் நம்முடைய திருமால் என்று அன்புடன் அழைக்கப்படும் திருவேங்கடவனின் திருத் தலமாகும் இது. 2119

117. பெரிய கடல் போன்ற நிறத்தையுடைய பெருமான் பெயர்த்து எடுத்தது நிலவுலகாம். கோவர்த்தன மலையைக் கையில் தூக்கி எடுத்தான். கஞ்சன் அழிந்து போம்படிச் செய்தான். திருப்பாற் கடலிலே பள்ளி கொண்டுள்ளான். நின்றிருந்து அருள்வது திருவேங்கட மலையேயாம். 2120

118. பெரிய வில்லையும், அம்பையும் கையில் ஏந்தி வேடர்கள் கையிலுள்ள செந்நிறமான நெருப்புக்கு அஞ்சி யானைகள் புன்செய் நிலங்களிலிருந்து விலகிச் செல்லும். வானில் உள்ள நட்சத்திரங்கள் விழும் போதும் அதையும் பார்த்து தீ என்று அஞ்சும் இடம் திருவேங்கடத் திருமலையே. அசுரர்களுக்கு அரசனான இரணியன் உயிர் மாய்ந்து விழுந்ததைக் கண்டு உகந்த நரசிங்க பெருமான் உறையும் தலம் இத்திருமலையாகும். 2121

119. உணர்வாரார் உன் பெருமை ? ஊழி தோறூழி*
உணர்வாரார் உன்னுருவந்தன்னை *- உணர்வாரார் ?
விண்ணகத்தாய் ! மண்ணகத்தாய் ! வேங்கடத்தாய் !* நால்வேதப்
பண்ணகத்தாய் ! நீ கிடந்தபால்.
2149 (மு.தி. 68)

120. வழி நின்று நின்னைத் தொழுவார் *வழுவா
மொழி நின்ற மூர்த்தியரேயாவர் *- பழுதொன்றும்
வாராத வண்ணமே விண் கொடுக்கும் *மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். 2157 (மு.தி. 76)

121. வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும்* அஃகாத
பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகரும் *நான் கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே*
என்றால் கெடுமாம் இடர். 2158 (மு.தி. 77)

122. படையாரும் வாட் கண்ணார் பாரசிநாள் *பைம்பூந்
தொடையலோடு ஏந்திய தூபம் *- இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே *மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. 2163(மு.தி. 82)

123. **உளன் கண்டாய் நன்னெஞ்சே ! உத்தம னென்றும்
உளன் கண்டாய் *உள்ளுவாருள்ளத்து - உளன் கண்டாய்*
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்*
உள்ளத்தினுள்ளா னென்று ஓர். 2180 (மு.தி. 99)

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

119. ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பவனே ! இவ்வுலகத்தில் அவதரித்த வனே! திருவேங்கடத்தில் உறையும் தலைவனே ! நான்கு வேதங்களின் பண்களிலும் நிலைபெற்றிருப்பவனே ! எண்ணிறந்த ஊழிக் காலத்திலும் உனது பெருமையை உணரவல்லவர் ஒருவருமிலை. நீ பள்ளி கொண்டுள்ள திருப்பாற் கடலின் பெருமையை அறிவார் யார் ?
2149

120. பக்திமார்க்கத்தில் நிலையாக இருந்து உன்னைத் தொழுபவர்கள் அழிவற்ற வேதத்தில் சொல்லப்பட்ட சொருபத்தை அடைவர். முன்பு திருவடியால் மண்ணளந்த பெருமானது திருவேங்கட மலை எந்தக் குறைவும் இன்றி பரம பதத்தைக் கொடுக்கும். 2157

121. திருவேங்கடமும், திருவைகுந்தமும், திருவெஃகாவும், குறையாத மலர்கள் மிகுந்த குளங்களைக் கொண்ட திருக்கோவலூரும் ஆகிய நான்கு திவ்ய தலங்களிலும் முறையே நின்ற திருக்கோலத்திலும், அமர்ந்த திருக்கோலத்திலும், கிடந்த திருக்கோலத்திலும், நடந்த திருக் கோலத்திலும், உள்ளான் என்று சொன்னாலும் கூட நமது துன்பம் கெடும். 2158

122. மிகவும் ஒளி பொருந்திய கண்களையுடைய பெண்கள் துவாதசியன்று பகவானை வணங்க அழகிய பூமாலைகளும் தூபமும் ஏந்துவர். இந்த தூபத்தின் புகை வானத்திலுள்ள நட்சத்திரங்களின் ஒளியை மங்கச் செய்கிறது. இப்படிப்பட்ட திருவேங்கட மலை முன்பு மாரீசன் மாயுமாறு அம்பு எய்தவனுடைய மலையாகும். 2163

123. எனக்கு முன் பகவானிடம் அன்பு கொள்ளும் நெஞ்சே ! புருஷோத்தமனான எம்பெருமான் நம்மைக் காப்பதற்காகவே எப்போதும் இருக்கிறான். தமது நற்செயல் நிறைவேற நீரிலும், மலையிலும் நின்று தவஞ்செய்வர். உன்னுடைய உள்ளத்தில் இருந்து அருள்வதற்காக பகவான் திருப்பாற்கடலிலும், திருவேங்கடத்திலும் உறைகின்றான். தன்னை நினைப்பவர்களது உள்ளத்தில் இவன் இருப்பதால், அவனை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.
2180

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

## பூதத்தாழ்வார் அருளிச் செய்த
## இரண்டாம் திருவந்தாதி

124. சென்றது இலங்கை மேல் செவ்வேதன் சீற்றத்தால்*
கொன்றது இராவணனைக் கூறுங்கால் *நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே *விண்ணவர் தம்
வாயோங்கு தொல்புகழான்வந்து. 2206 (இ.திரு. 25)

125. மனத்துள்ளான் வேங்கடத்தான் மா கடலான் *மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான் *- எனைப் பலரும்
தேவாதி தேவ னெனப்படுவான் *முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன். 2209 (இ.திரு 28)

126. துணிந்தது சிந்தை துழாயலங்கல் *அங்கம்
அணிந்தவன்பேர் உள்ளதுப் பல்கால் *- பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல் வேங்கடவனையே*
வாய் திறங்கள் சொல்லுமவகை. 2214 (இ.திரு 33)

127. உளதென்றிறுமாவார உண்டில்லையென்று*
தளர்தல தனருகுஞ்சாரார் *- அளவரிய
வேதத்தான் வேஙகடததான் விண்ணோர்முடி தோயும்*
பாதத்தான் பாதம் பயினறு.

2226(இ.திரு 45)

128. பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னுள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னுள் - பயின்றது
அணி திகழும் சோலை அணி நீர்மலையே
மணி திகழும் வண் தடக்கைமால்.

2227 (இர.திரு.46)

# பூதத்தாழ்வார் அருளிச் செய்த
# இரண்டாம் திருவந்தாதி

124. நித்யசூரிகள் வாயாரத் தன்னை வாழ்த்தும் உயர்ந்த பழமையான குணங்களை உடையவன் எம்பெருமான். கடுங்கோபத்துடன் இலங்கை மீது படையெடுத்துச் சென்று கொன்றது இராவணனை. நின்றிருந்து அடியார்களைக் காத்து வருவது மூங்கில் ஓங்கி வளர்ந்துள்ள குளிர்ந்த சாரலுடைய திருவேங்கட மலையேயாம். 2206

125. கண்ணனாய் பிறந்து கேசியின் வாயைப் பிளந்தவனும், அளவிட முடியாத வைதிகர்கள், வேதியர்கள், அறிவாளிகள் ஆகிய அனைவரும், "இவன் தேவர்கட்கெல்லாம் ஆதியான தேவன்" என்று பாராட்டும் பெறுபவன். என் மனத்திலுள்ளான் ; திருவேங்கடத்தில் நான்காணு மாறு நின்றுள்ளான் ; திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளான். அதுவுமன்றி நினைத்தற்கரிய பெருமையுடைய திருவரங்கத்திலும் உளன். 2209

126. என் மனம் உன்னைப் பற்றி நினைப்பதில் உறுதியாக உள்ளது. என் வாக்கு உன் திருவடிகளையே துதித்து மகிழ்ந்தது. உனது சக்ராயுதத்தையும், சங்கத்தையும், மற்றுமுள்ள திவ்ய ஆயுதங்களையும் பாராட்டி எனது உடல் ஆடுகின்றது. இவைகளை எல்லாம் நினைத்து என் நெஞ்சம் மகிழ்ந்தது. 2214

127. அளவிட முடியாத வேதங்களை உடையவனும், திருவேங்கட மலையில் வந்து நிற்பவனும், நித்ய சூரிகளது முடிகள் படியும் திருவடிகள் உடையவனுமான பெருமானுடைய திருவடிகளிலே பழகி இருப்பவர்கள் தமக்கு அப்பேறு கிடைத்துள்ளது என்று கர்வம் கொள்ள மாட்டார்கள். அப்பேறு இல்லையென்று தளரவும் மாட்டார்கள். 2226

128. நீலமணி போல் விளங்குபவனும், வளமையான கொடுக்கும் குணமுள்ள பெரிய திருக்கைகளை உடையவனுமான எம்பெருமான் நித்தியமாக உறைவது திருவரங்கம், திருகோட்டியூர், என்றும் உறைவது திருவேங்கடம் நெடுங்காலம் நித்தியவாசஞ் செய்வது அழகுடன் திகழும் சோலை சூழ்ந்த திருநீர் மலையாகும். 2227

129. நெறியார் குழற்கற்றை முன்னின்று பின் தாழ்ந்து*
அறியாதிளங்கிரி யென்றெண்ணி * – பிறியாது
பூங்கொடிக்கள் வைகும் பொருபுனற்குன்றென்னும்
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு. 2234 (இர.திரு. 53)

130. வெற்பென்றிருஞ்சோலை வேங்கட மென்றிவ் விரண்டும்*
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் *நிற்பென்று
உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் *வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று. 2235 (இர.திரு. 54)

131. போதறிந்து வானரங்கள் பூஞ்சுனை புக்கு *ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் *போது உள்ளம் ! போது
மணி வேங்கடவன் மலரடிக்கே செல்ல*
அணி வேங்கடவன் பேராய்ந்து. 2253 (இர.திரு. 72)

132. பெருகுமதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று*
இருகணிள மூங்கில் வாங்கி* - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்*
வான் கலந்த வண்ணன் வரை. 2256 (இர. திரு. 75)

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்

## பேயாழ்வார் அருளிச் செய்த
## மூன்றாம் திருவந்தாதி

133. மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கை விட்டு*
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம்* - நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடி தோயும்*
பாதத்தான் பாதம் பணிந்து. 2295 (மூ.திரு. 14)

129. தவநெறியில் நின்று தன்னை அடைபவர்களது மயிர் முடி முன்னே முளைத்துப் பின்னே தாழ்ந்திருக்கும். இதை அறியாமல் அது ஒரு சிறிய மலை என்று எண்ணிக் கொண்டு பூங்கொடிகள் அவ்விடம் விட்டுப் பிரியாமல் என்றும் படர்ந்திருக்கும். இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடமே நாம் விரும்பும் திருமலையாகும். 2234

130. பெருமானே ! திருமாலிருஞ்சோலை, திருவேங்கடமாமலை இவையிரண்டும் நீ உகந்து வாழும் இடம் என்று நீதிருவுள்ளம் கொண்டாய். என்னுடைய உள்ளமாகிய கோயிலையும், "நாம் உகந்து வாழுமிடம்" என்று நீ எண்ணியிருப்பதை அறிந்து கொண்டேன். என்னுடைய நெஞ்சிற் புகுவதற்குப் பாலாலயமாகக் கொண்ட திருப்பாற் கடலைக்கை விடாதே ! என்று வேண்டுகிறேன். 2235

131. திருவேங்கடத் திருமலையில் உள்ள வானரங்கள் பொழுது விடிந்ததை உணர்ந்து விழித்துப் பூ அடர்ந்த நீர் நிலைகளிலே புகுந்து நீராடும். அங்கு மலர்ந்துள்ள பூக்களைப் பறித்துக் கொண்டு எம்பிரானிடம் சமர்ப்பித்துத் துதி செய்கின்றன. என் மனமே ! நீயும் பெருமானது திருநாமங்களை ஓதிக் கொண்டு, திருவேங்கடவனுக்கு மலர்களை சமர்ப்பிப்பாயாக ! 2253

132. பெருகுகின்ற மத நீரையுடைய ஆண் யானை தன் பெண் யானைக்கு இரண்டு கணுக்களையுடைய மூங்கில் குருத்தைப் பறித்து அதைத் தேனில் தோய்த்து நீட்டுகின்றது திருவேங்கட மலையில். மேகத்தோடொத்த நிறமுடைய பெருமான் உறையும் மலையாக விளங்குவதைக் காண்பீராக ! 2256

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்

133. நான்கு வேதங்களில் சொல்லப்படுபவனும் திருவேங்கட மலையில் நின்றிருந்து அருள்பவனும், நித்திய சூரிகளின் மகுடம் பொருந்தும் திருவடிகளை உடையவன் திருவேங்கட மலையில் உள்ளான். அத்திருமலையில் உறைபவனின் பாதம் பணிந்து, அப்பெருமானிடத்து மனம் ஐக்கியமாக, பெண்களின் தோள்களை அணைக்க வேண்டுமென்ற சிற்றின்ப ஆசை நீங்கி வேதங்களில் மனம் செலுத்த இயலும். 2295

134. சிறந்த என்சிந்தையும் செங்கணரவும்*
நிறைந்த சீர்நீள் கச்சியுள்ளும்* - உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம் கடவார் தண் துழாயார். 2307 (மூ.திரு.26)

135. சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்*
நேர்ந்த என்சிந்தை நிறைவிசும்பு* - வாய்ந்த
மறைபாடகம் அனந்தன் வண்துழாய்க் கண்ணி
இறைபாடி ஆய இவை. 2311 (மூ.திரு.30)

136. பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்*
நூற்கடலும் நுண்ணூல தாமரை மேல் *- பாற்பட்
டிருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்*
குருந்தொசித்த கோபாலகன் 2313 (மூ.திரு.32)

137. இறையாய் நிலனாகி எண்திசையும்தானாய்*
மறையாய் மறைப்பொருளாய் வானாய்* - பிறை வாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான்*
உள்ளத்தினுள்ளே உளன். 2320 (மூ. திரு.39)

138. உளன் கண்டாய் நல் நெஞ்சே ! உத்தமனென்றும்
உளன் கண்டாய் *உள்ளுவாருள்ளத்து - உளன் கண்டாய்*
விண்ணெடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்*
மண்ணெடுங்கத்தானளந்த மண். 2321 (மூ.திரு. 40)

134. குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்துள்ள எம்பெருமான் என் நெஞ்சில் எப்போதும் நிறைந்துள்ளான். அது தவிர அவன் உறையும் இடம் சிவந்த கண்களையுடைய திருவனந்தாழ்வானும், கச்சி, திருவேங்கடம், திருவெஃகா, திருவேளுக்கை முதலிய திருத்தலங்களும் ஆகும். 2307

135. யசோதைக்குக் காட்டிய எளிமையை எல்லோரும் அனுபவிக்க அவன் திருக்கோயில்களிலே உறைந்துள்ளான் என்கிறார் ஆழ்வார். அழகிய திருத்துழாய் மாலையணிந்துள்ள ஸ்ரீமந்நாராயணன் காட்சி தரும் இடங்கள் : திருபாற்கடல், திருக்குடந்தை, திருவேங்கடம், எனது நெஞ்சம், வேதங்கள், பரமபதம், திருப்பாடகம், ஆதிசேஷன் முதலியனவாகும். 2311

136. குருந்த மரத்தை வெட்டி வீழ்த்திய கோபாலனாகிய கண்ணன் திருப்பாற்கடலையும், திருவேங்கடத்தையும், அனந்தாழ்வானையும், திருவைகுந்தத்தையும் இருப்பிடமாகக் கொண்டிருக்கிறான். அன்றியும், பலசாஸ்த்ரங்களும், யோகிகளின் நெஞ்சும் எம்பெருமான் உறையும் இடங்களாயுள்ளன. 2313

137. யாவருக்கும் ஸ்வாமியாய் பூமிக்கு அந்தர்யாமியாய் எட்டுத் திசைகளிலுமுள்ள எல்லாப் பொருள்களிலும் உறைந்தவனாய் வேதங்களாகியும் வேதங்களின் பொருளாக இருப்பவனாய் வைகுண்ட லோகத்திற்கு இறைவனாய் உள்ள எம்பெருமான் திருவேங்கட மலையில் உறைகின்றான். அவன் நெஞ்சிலும் உறைகின்றான். சந்திர மண்டலத்தைத் தொடுகின்ற உயரம். அழகியநீர் நிலைகளை உடைய தலம் இது. 2320

138. எம்பெருமானை உள்ளிடத்துக் கொண்ட நன்னெஞ்சமே ! திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், தன்னை நினைப்பவரின் மனத்தில் வாழ்கின்றான். திருமலை மிக உயர்ந்த சிகரங்களையும், அருவிகளையும் உடையது. மாவலியிடம் யாசித்து ஈரடியால் உலகத்தை அளந்த எம்பெருமான் உறையும் இடம் வேங்கடமாகும். 2321

139. புரிந்து மதவேழம் மாப்பிடியோடு ஊடி*
திரிந்து சினத்தால் பொருது * - விரிந்தசீர்
வெண்கோட்டு முத்து திர்க்கும் வேங்கடமே *மேலொருநாள்
மண் கோட்டுக் கொண்டான் மலை. 2326 (மூன்.திரு. 45)

140. தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி*
அளிந்த கடுவனையே நோக்கி* - விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே மேலொரு நாள்
மண்மதியில் கொண்டு கந்தான் வாழ்வு.
2339 (மூன்.திரு.58)

141. **பண் டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்*
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல்* வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை*
இளங்குமரன் தன் விண்ணகர். 2342 (மூன்.திரு. 61)

142. விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம்*
மண்ணகரம் மாமாட வேளுக்கை* - மண்ணகத்த
தென்குடந்தை தேனார்திருவரங்கம் தென்கோட்டி*
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. 2343 (மூன்.திரு.62)

143. தாழ் சடையும் நீள்முடியும் ஒள் மழுவும் சக்கரமும்*
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் *- சூழும்
திரண்டருவி பாயும் திருமலை மேலெந்தைக்கு*
இரண்டுருவு மொன்றா இசைந்து. 2344 (மூன்.திரு. 63)

144. பார்த்த கடுவன் சுனை நீர் நிழல் கண்டு*
பேர்த்தோர் கடுவனெனப் பேர்ந்து *- கார்த்த
களங்கனிக்குக் கை நீட்டும் வேங்கடமே* மேல் நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு. 2349 (மூன்.திரு.68)

139. பெருமையோடு பரமபதத்தில் உறையும் பெருமான், நமக்காகவே திருவேங்கடமலையில் உறைகிறான் என்கிறார் ஆழ்வார். மதம் கொண்ட ஆண் யானை பெண் யானையுடன் சேர்ந்து, பின் அதை விட்டுப் பிரிந்து, பின்கோபத்தால் மோதி தன்தந்தங்களிலிருந்து முத்துக்களை உதிர்க்கும் திருவேங்கட மலையே முன்னொரு நாள் வராக அவதாரத்தில் பூமியைத் தனது கோரப் பல்லின் மீது கொண்டு வந்த பெருமானுடைய மலையாகும். 2326

140. முன்னொரு காலத்தில் பூமியைத் தன் மதிநுட்பத்தால் மாவலியிடம் பெற்றுக் கொண்டு திருவுள்ளம் மகிழ்ந்த வேங்கடவன் வாழும் இடம் இத்திருமலையாகும். அங்கு படிகப் பாறையில் அமர்ந்துள்ள பெண் குரங்கு, ஆண் குரங்கை நோக்கி, "வானிலே ஒளி வீசுகின்ற சந்திரனைப் பிடித்துக் கொடு" என்று கேட்ட இடம் திருவேங்கடத் திருமலையாகும். 2339

141. பரமபதத்தைக் கோயிலாகக் கொண்டு எப்போதும் எம்பெருமான் அங்கே உறைகின்றான். திருப்பாற்கடல், திருவேங்கடம், சோலைகள் நிறைந்த திருக்கடிகை, திருவிண்ணகர் ஆகிய திருத்தலங்களும் அவன் உறையும் இடங்களே ஆகும். 2342

142. மகாபலியிடம் தன்னுடைய உள்ளங்கையாலே நீரேற்ற பெருமான் உயர்வு தாழ்வு பாராமல் தங்குமிடங்கள் : திருவிண்ணகர், திருவெஃகா, நீர்வளம் மிக்க திருவேங்கடம். பூமியில் இதுவே நகரம் எனச் சொல்லத்தக்க திருவேளுக்கை, திருக்குடந்தை, சோலைகள் சூழ்ந்த திருவரங்கம், திருக்கோட்டியூர் ஆகிய திருத்தலங்களாகும். 2343

143. தாழ்ந்த சடையும், அழகிய மழுவென்னும் ஆயுதமும் சுற்றிலும் அணிந்துள்ள நாகாபரணமும் வாய்ந்த தவ வேடமும் தனக்கே உரிய நீண்ட திருமுடியும், திருவாழியும், பொன்னரைநாணும் வாய்ந்த வடிவமும் ஆகிய இரண்டும் இப்பெருமானுக்குப் பொருந்தித் தோன்றும் என்கிறார்.

2344

144. திருவேங்கட மலையில் சுனை நீரிலே கவிந்து பார்க்கும் ஆண் குரங்கு நீரிலே தன்னுடைய நிழலைக் கண்டு அதில் இன்னொரு ஆண் குரங்கு இருப்பதாக அஞ்சி அவ்விடத்தை விட்டு ஓடும். பின்னர் கறுப்பான களவக் கனியைப் பறிப்பான் பொருட்டு கை நீட்டும். முன்பு ஒரு நாள் விளம்பழங்களை உதிர்ப்பதற்காக கன்றின் வடிவில் வந்த அசுரனை எறிதடியாக வீசி எறிந்த பெருமானின் இடம் இத்தகைய காட்சி பொருந்திய திருமலையாகும். 2349

145. வெற்பென்று வேங்கடம் பாடும் *வியன்துழாய்
கற்பென்று சூடும் கருங்குழல் மேல் *- மல் பொன்ற
நீண்டதோள் மால் கிடந்த நீள்கடல் நீராடுவான்*
பூண்ட நாளெல்லாம் புகும்.
2350 (மூன்.திரு.69)

146. புகு மதத்தால் வாய் பூசிக் கீழ் தாழ்ந்து *- அருவி
உகு மதத்தால் கால் கழுவிக் கையால் *- மிகு மதத்தேன்
விண்ட மலர் கொண்டு விறல் வேங்கடவனையே
கண்டு வணங்கும் களிறு. 2351 (மூன். திரு.70)

147. களிறு முகில் குத்தக் கையெடுத்தோடி*
ஒளிறு மருப் பொசிகையாளி - பிளிறி
விழ *கொன்று நின்ற திரும்வேங்கடமே *மேல் நாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று. 2352 (மூன்.திரு. 71)

148. குன்றொன்றினாய குறமகளிர் கோல் வளைக்கை*
சென்று விளையாடும் தீங்கழைபோய் *- வென்று
விளங்கு மதிகோள் விடுக்கும் வேங்கடமே *மேலை
இளங்குமரர் கோமானிடம். 2353 (மூன். திரு. 72)

149. இடம் வலமேழ் பூண்ட இரவித்தே ரோட்டி*
வடமுக வேங்கடத்து மன்னும் * - குடம்நயந்த
கூத்தனாய் நின்றான் குரை கழலே கூறுவதே*
நாத்தன்னாலுள்ள நலம். 2354 (மூன். திரு. 73)

145. என் மகளானவள் திருவேங்கட மலையைப் பற்றியே பாடுகிறாள். திருத்துழாயைத் தன் கூந்தலில் அணிந்து கொள்கிறாள். மல்லர்களை அழித்த ஸர்வேச்வரன் பள்ளி கொண்டுள்ள திருபாற்கடலிலே நீராடுவதற்காக ஒவ்வொரு நாளும் புறப்படுகின்றாள். 2350

146. திருமலையில் வாழும் யானையானது மத்தகம், கன்னம் இவற்றிலிருந்து வாயில் புகுகின்ற மதநீரினால் வாயை சுத்தம் செய்கிறது. கீழ் நோக்கித் தாழ்ந்து வரும் நீர்ப் பெருக்கினால் கை, கால்களை சுத்தம் செய்து கொள்கிறது. பின் அழகுள்ள மலர்களால் தன் துதிக்கை கொண்டு பெருமிடுக்குடைய பெருமாளைச் சேவித்து வணங்குகின்றது. 2351

147. யானையானது தனது துதிக்கையால் மத யானை போலெழுந்த மேகங்களைக் குத்துகின்றது. இதைக் கண்ணுற்றயாளியானது அந்த யானை வாய் விட்டு அலறிக் கொண்டு விழும் படிக் கொன்று பெருமிதத்துடன் முழக்கம் செய்கிறது திருவேங்கடத்தில். கிருஷ்ணாவ தாரத்தில் இளங்கன்றை கொண்டு விளங்கனி மேல் எறிந்த தலமாகும் இம்மலை. 2352

148. நித்திய சூரிகளின் தலைவனான எம்பெருமான் உறைவிடம் இத்திருமலையாகும். இத்தலத்தையே நித்திய வாழ்விடமாகக் கொண்ட குறத்திகள், காட்டு மூங்கில்களை வளைப்பர். சந்திர மண்டலம் வரை உயர்ந்துள்ள மூங்கில்கள் ராகுவை நீக்கி சந்திரனைக் கிரகணத்திலிருந்து விடுவிக்கும்படியான இடம் இத்திருமலையாகும்.

149. நாவினால் நாம் கொள்ளத்தக்க பயனாவது ஏழு குதிரைகள் பூட்டப் பெற்ற சூரியனுடைய தேரை ஓட்டுபவனும், திருவேங்கடத்திருமலையில் நின்று அருள்பவனுமாகிய திருவேங்கடவன் ஆசையுடன் ஆயர்களோடு குடக் கூத்தாடிய கண்ணபிரானின் ஆபரணங்கள் ஒலிக்கின்ற திருவடிகளைத் துதிப்பதே ஆகும். 2354

150. சார்ந்தகடு தேய்ப்பத் தடாவிய கோட்டுச் சிவாய்*
ஊர் ந்தியங்கும் வெண்மதியின்ஒண் முயலை *சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் திருமலையே* - ஆயன்
புன வேங்கை நாறும் பொருப்பு. 2356 (மூன்.திரு. 75)

151. முடிந்தபொழுதில் குறவாணர் *ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள் வித்த *- தடிந்தெழுந்த
வேய்ங்கழை போய் விண்திறக்கும் வேங்கடமே *மேலொரு நாள்
தீங்குழல் வாய்வைத்தான் சிலம்பு. 2370 (மூன்.திரு. 89)

பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

## நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம்

152. காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில் *இந்நாள்
பாண்குன்ற நாடர் பயில்கின்றன *இதெல்லாம் அறிந்தோம்
மாண்குன்ற மேந்தி தண்மாமலை வேங்கடத்து உம்பர் நம்பும்
சேண்குன்றம் சென்று *பொருள் படைப்பான் கற்ற திண்ணனவே.
2485 (8)

153. மாயோன் வடதிருவேங்கட நாட *வல்லிக் கொடிகாள்!
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர் உரையீர் *நுமது
வாயோ? அதுவன்றிவல்வினை யேனும் கிளியுமெள்கும்
ஆயோ? அடும் தொண்டை யோ? *அறையோ! இதறிவரிதே.
2487 (10)

150. "விரோதிகளை அழிக்கும் இயல்புடைய கண்ணபிரான் விரும்பி உறையும் மலை திருவேங்கடம்" என்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

உயர்ந்த மலைச் சிகரங்களின் உச்சியில் தன் அடிவயிறு தேயும் படியாக நெருங்கி, மெல்ல நகரும் வெண்மையான சந்திரனிடத்துள்ள அழகிய முயலைச் சார்ந்து, அதனைப் பிடிக்க இயலாமலும், பிடித்து விடலாம் என்றும் அதை நோக்கியபடியே நிற்கும் புலியுள்ள இடம் திருவேங்கட மலையாகும். நறுமணங்கமழும் வேங்கை மரங்கள் அடர்ந்த கண்ணபிரானது மலை இதுவாகும் என்கிறார். 2356

151. திருவேங்கட மலையில் வாழும் குறவர்களோடும் திருவேங்கட முடையானோடும் வித்தியாசமின்றித் தமக்கு விருப்பாயிருத்தலை விளக்குகிறார் ஆழ்வார்.

இறக்கும் தருவாயிலும் உள்ள கிழப்பருவமுள்ள குறவர்கள் புதிய தினை விதைகளை விதைப்பர். காட்டுப் பன்றிகள் மூங்கில்களை வேர் பறித்து விழுமாறு உழுத நிலங்கள் அவைகள். நிலத்தின் செழுமையாலே மூங்கிற் கழைகள் பின்பும் அதே இடத்தில் வளர்ந்து விண்ணைத் தொடுகின்றது திருவேங்கட மலையில். முன்னொரு காலத்தில் தன் திருவாயில் இனிய இசையூட்டும் புல்லாங்குழலை வைத்து ஊதிய கண்ணபிரானுடைய மலையாகும் இது. 2370

152. தோழி! குன்றுகள் நிறைந்த நாட்டுக்குத் தலைவரான என் நாயகர் என்னிடம் பழகும் விதமே புதிதாகத் தோன்றுகிறது. என்னிடம் அவர் நடந்து கொள்ளும் விதம் வெளி உபசாரம் கொண்டதாக உள்ளது. இதிலிருந்து அவர் என்னை விட்டுப் பிரிந்து பொருள் தேடப் போகிறார் என்பது தெளிவாகிறது. கோவர்த்தன மலையைத் தூக்கிய கண்ணபிரானது குளிர்ந்த சிறந்த வேங்கடமலைக்குச் சென்று அவர் பொருள் ஈட்டப் போகிறார். அதற்காகவே அவர் என்னிடம் பசப்பான வார்த்தைகளைப் பேசுகிறார். 2485

153. தலைவன் தலைவியைக் கூடிப் பிறகு பிரிகிறான். மீண்டும் தன் நாயகியைச் சேர ஆசை கொண்டு அவள் தோழியிடம் தன் குறையைச் சொல்லுகிறான். பயனில்லை. பெண்களே! மாயங்கள் மிகுந்த மாயவன் இடமான திருவேங்கட மலையை வாழ்விடமாகக் கொண்ட நீங்கள் என்னுடைய காதல் நோயை உரைத்தாலும் கேட்க வில்லை. உங்கள் வாயழகு என்னை மிகவும் கவர்ந்தது. அதுமட்டுமன்றி தீவினை யுடைய நானும் கிளியும் நீங்கள் சொல்லும் "ஆயோ" எனும் சொல்லும், உங்கள் சிவந்த உதடுகளும் என்னைத் துன்புறுத்துகின்றன. என் முறையீட்டைக் கேட்ட பிறகாவது நீங்கள் கூறுங்கள். அதில் எது என் துன்பத்திற்குக் காரணம்? என்று. 2487

154. கயலோநும கண்கள் ? என்று களிறு வினவி நிற்றீர்*
அயலோரறியிலும் ஈதென்ன வார்த்தை ? *கடல் கவர்ந்த
புயலோடு உலாம் கொண்டல் வண்ணன் புனவேங்கடத் எம்மொடும்
பயலோ இலீர் *கொல்லை காக்கின்ற நாளும் பலபலவே.
2492 (15)

155. இசை மின்கள் தூதென்று இசைத்தால் இசையிலம் *என் தலை மேல்
அசை மின்களென்றால் அசையுங் கொலாம் ? *அம்பொன்
மாமணிகள்
திசைமின் மிளிரும் திருவேங்கடத்துவன் தாள் சிமய
மிசைமின் மிளிரிய போவான் *வழிக் கொண்ட மேகங்களே !
2508 (31)

156. ஒண்ணுதல் மாமை யொளி பயவாமை *விரைந்து நந்தேர்
நண்ணுதல் வேண்டும் வலவ !கடாகின்று *தேன் நவின்ற
விண்முதல் நாயகன் நீள்முடி வெண்முத்த வாசிகைத் தாய்
மண்முதல் சேர்வுற்று *அருவி செய்யா நிற்கும் மாமலைக்கே.
2527 (50)

157. **முலையோ முழு முற்றும் போந்தில *மொய் பூங்குழல் குறிய
கலையோ அரையில்லை நாவோ குழறும் *கடல் மண்ணெல்லாம்
விலையோ வென மிளிரும் கண் இவள்பரமே ? பெருமான்
மலையோ* திருவேங்கட மென்று கற்கின்ற வாசகமே.
2537 (60)

154. இங்கு யானைகள் வந்ததா ? எனக் கேட்டுக் கொண்டு, அத்துடன் உங்கள் கண்கள் கயல் மீன்களா ? என்று தலைவியின் கண்ணழகைப் பேசுகிறீர். அண்டை அயலார் இதைக் கேட்டால், இது என்ன இரண்டு விதமாகப் பேசுகிறாரே என்று சந்தேகப்படுவர். நாங்கள் புனங் காப்பதையும் தவறாக எண்ணுவர். எம்பெருமான் கடல் நீரை முகந்து வரும் காள மேகம் போன்ற திருநிறம் உடையவன். அவனது திருவேங்கட மலையில் புனம் காக்கிற எங்களுடன் நெடுநாள் பழக்க முடையவர்போல் பேச வேண்டாம். எம்முடன் கூட்டுறவு கொள்ள ஆசை போலும் உமக்கு என்று தோழி கூறுவதாக அமைந்தது இப்பாசுரம். 2492

155. திருவேங்கட மலையில் அழகான பொன்னும், மணிகளும் ஒளி வீசுகின்றன. அங்குள்ள மலைகளின் உச்சியில் தவழும் மேகங்களே ! நீங்கள் எனக்காக தூது செல்ல உடன்பட வில்லையே ! திருவேங்கட வனிடம் செல்லும் மேகங்களே ! அந்த பாக்கியத்தைப் பெறாத என் தலையின் மீதாவது உங்கள் பாதத்தை வைத்துச் செல்லுங்கள். இவ்வாறு நான் வேண்டினுல் நீங்கள் அங்குச் செல்வீர்களா ? என தலைவி இரங்கிப் பேசுகிறாள். 2508

156. நாயகன் நாயகியின் இல்லம் நோக்கி தன் தேரை விரைந்து செலுத்தும்படி தேர்ப்பாகனிடம் சொல்லுகிறான். என் தலைவியின் நிறம் பசலை அடையும் முன் நாம் அங்கு செல்ல வேண்டும். பெரிய திருமலைக்குத் தேரைச் செலுத்து. பரமபத நாதன் தன் திருமுடியில் வெண்மையான முத்து மாலை அணிந்துள்ளான். அங்கே அம்மலையில் நீர்ப் பெருக்கெடுத்து ஓடும். இத்தகைய சிறப்புடைய மலைக்கு நீ தேரை ஓட்டிச் செல்வாயாக ! 2527

157. இப்பெண்ணுக்கு மார்புகள் முழுதாக வளர வில்லை. தலைமயிர்களும் நன்கு நீண்டு வளர வில்லை. ஆடையோ இடுப்பில் நிலையாக இல்லை. பேச்சும் குழறிப் பேசும் மழலை மொழியாகும். ஆனுல் கண்ணை நோக்கினுல், இவ்வுலகில் உள்ள கடலென்ன, நிலமென்ன இவையாவும் கூட போதுமான விலைமதிப்பாகாது. எம்பெருமான் திருமலையோ திருவேங்கடம் என்று பல தடவை சொல்லப் பயின்று விட்டாள். சிறுமியாகயிருந்தும் இதைச் சொல்லுகிறாளே அதிசயம் தான். 2537

158. காவியும் நீலமும் வேலும் கயலும் பலபல வென்று*
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு *அசுரைச் செற்ற
மாவியம் புள் வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம் சேர்
தூவியம் பேடையன்னாள் *கண்களாயதுணை மலரே.
2544(67)

159. உறுகின்ற கன்மங்கள் மேலன ஓர்ப்பிலராய் *இவளைப்
பெறுகின்ற தாயர் மெய்ந்நொந்து பெறார் கொல் ? *துழாய் குழல்வாய்த்
துறுகின்றிலர் தொல்லை வேங்கட மாட்டவும் சூழ்கின்றிலர்
இறுகின்றதால் இவளாகம் *மெல்லாவியெரி கொள்ளவே.
2558 (81)

## பெரிய திருவந்தாதி

160. கல்லும் கனை கடலும் வைகுந்தவானாடும்*
புல்லென்றொழிந்தன கொல் ? ஏபாவம் ! *- வெல்ல
நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான்*
அடியேனது உள்ளத்தகம். 2652 (68)

## நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி

161. கண்ணாவான் என்றும்*
மண்ணோர் விண்ணோர்க்கு*
தண்ணார் வேங்கட*
விண்ணோர் வெற்பனே. 2754 (1-8-3)

162. எந்தாய் ! தண் திருவேங்கடத்துள் நின்றாய் !
இலங்கை செற்றாய் ! *மராமரம்
பைந்தாள் ஏழ்உருவ ஒருவாளி கோத்த வில்லா !*
கொந்தார் தண்ணந்துழாயினாய் ! அமுதே !
உன்னை என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா !* வானேறே ! இனி எங்குப் போகின்றதே? 2848 (2-6-9)

158. எம்பெருமான் கருடப் பறவை மீதேறி அசுரர் கூட்டத்தை அழித்தவன். 'மாதவன்' என்னும் திருநாமம் கொண்ட அந்தத் திருமகள் கேள்வன் பசுக்களைக் காத்த கோவிந்தன் ஆவான். இத்தகைய திருவேங்கட மலையில் என் தலைவி உயிர் வாழ்கிறாள். தாமரை மலரை ஒத்த இவளது இரு கண்கள், செங்கழு நீர்ப்பூ, கருநெய்தல் மலர், வேல், கயல் மீன் என்னும் இவைகளையும் விட அழகுடையவை. என் மெல்லிய உயிரைக் கவர்வதற்கு, இவளின் அழகு படைத்த கண்கள் பெரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டாம் எனத் தலைவன் கூறுகிறான். 2544

159. இத்தலைவியின் நோய்க்கு உண்மையான காரணத்தை அறிந்து கொள்ளாமல் வெறியாட்டுத் தொடக்கமான காரியங்களை இவள் மேல் நடத்துகிறார்களே. இவள்கூந்தலிலே எம்பெருமானின் திருத்துழாய் மாலையைச் சூட்டி விட்டால் இவள் நோய் அகன்று விடும். திருவேங்கட மலைக்கு இவளை அழைத்துச் செல்ல வேண்டும். அவைகளைச் செய்யாமல் வேறு விதமான முயற்சியில் ஈடுபட்டால், தலைவி மேலும் தளர்ச்சியையே அடைவாள் என்கிறாள் தோழி. 2558

160. கறுத்த நிறம் உடைய கண்ணனாகிய எம்பெருமான் மிகவும் உயர்ந்தவன். அவன் என் நெஞ்சினுள் புகுந்து நிலையாக அமர்ந்து விட்டான். திருவேங்கடமலை, திருப்பாற்கடல், ஸ்ரீவை குண்டம் ஆகிய வை அவனுக்குரிய இடங்கள் ஆகும்.ஆயினும் என் நெஞ்சமே அவனுக்கு இவற்றை விடப் பெரிதாக உள்ளது.

161. எம்பெருமான், விண்ணவர்கள் ஆகிய நித்திய சூரிகளுக்கும், பூமியிலுள்ள மனிதர்களுக்கும் கண் போன்றவன் ஆவான். அவன் விண்ணோர் தங்கியுள்ள குளிர்ச்சி பொருந்திய திருவேங்கட மலையில் உள்ள வேங்கடவன் ஆவான். 2754

162. என் அப்பனே ! குளிர்ந்த வேங்கட மலையில் நிற்பவனே ! இராவணனை அழித்தவனே ! மராமரம் ஏழும் உருவ ஓர் அம்பை தொடுத்தவனே ! திருத்துழாய் மாலை தரித்தவனே ! என் அமுதமே ! என்னுடன் நீ கலந்து விட்டாய் ! இனி என்னை விட்டு எங்கு போக முடியும்? 2848

163. போகின்ற காலங்கள் போயகாலங்கள் போகு காலங்கள் *
தாய் தந்தையுயி
ராகின்ருய் ! உன்னை நான் அடைந்தேன் விடுவேனே ?*
பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும் நாதனே ! பரமா ! *தண் வேங்கடம்
மேகின்ருய்! தண்துழாய் விரைநாறுகண்ணியனே !
2849 (2-6-10)

164. பற்பநாபன் உயர்வற வுயரும் பெருந்திறலோன் *
எற்பரன் என்னையாக்கிக் கொண்டு எனக்கே தன்னைத் தந்த
கற்பகம் *என் அமுதம் கார்முகில் போலும் வேங்கடநல்
வெற்பன் *விசும் போர் பிரான் எந்தை தாமோ தரனே.
2861 (2-7-11)

(திருவேங்கட முடையான் திருவடிகளில்
காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்யப் பாரித்தல்)

165. *ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி*
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்*
தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே.
2919 (3-3-1)

166. எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்
முந்தை *வானவர் வானவர் கோனொடும்*
சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து*
அந்தமில் புகழ்க் காரெழி லண்ணலே. 2920 (3-3-2)

167. அண்ணல் மாயன் அணிகொள் செந்தாமரைக்
கண்ணன் *செங்கனிவாய்க் கருமாணிக்கம்*
தெண்ணிறை (ச்) சுனை நீர்த் திருவேங்கடத்து*
எண்ணில் தொல்புகழ் வானவரீசனே.
2921(3-3-3)

163. நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் என் தாயாகவும், தந்தையாகவும், உயிராகவும் உள்ளவனே ! உன்னை நான் அடைந்தது, உன்னை விட்டுப் பிரிவதற்காக அல்ல. எங்கும் பரவுகின்ற புகழுடைய மூன்று உலகங்களுக்கும் நீ தலைவன் அல்லவா ! குளிர்ந்த திருவேங்கடத் திருமலையில் நின்று அருள் செய்கின்ற பெருமானே ! மணம் வீசும் திருத்துழாய் மாலையை அணிந்தவனே ! இனி நான் உன்னை விட மாட்டேன். 2849

164. பெருமையும், வலிமையுமுடைய எம்பிரான் என்னைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டான். எனக்கே தன்னைத் தந்தான். யாசகனாகிய என்னையும் படைத்தருளினமையாலே கற்பக விருட்சத்தைக் காட்டிலும் சிறப்புப் பெற்றவன். திருவேங்கட மலையில் நிற்பவன். நித்ய சூரிகளுக்குத் தலைவன். அவனே "தன்னைக் கட்டுண்ணப் பண்ணிய" தாமோதரன் என்பவன். 2861

165. அழகு பொருந்திய எல்லையற்ற சோதியுடன் கூடிய எம்பெருமான் அருவிகள் சப்திக்கும் திருவேங்கட மலையில் உள்ளான். திருவேங்கட முடையானுக்கு இடைவிடாமல் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் சகலவிதமான அடிமைத் தொழில்களையும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். ("இப்பாசுரத்தால் கைங்கர்யப் பிரதானமான திருமந்திரத்தின் பொருளை அருளிச் செய்கிறார்" என்பர்.) 2919

166. முடிவில்லாத புகழையுடையவனும் நீல நிறமுடையவனுமான எம் பெருமான் எம்குலநாதன். அவன்திருவேங்கடமுடையான். நித்திய சூரிகள் சேனை முதலிகளுடன் வந்து பூக்களைத் தூவித் திருமலையில் எம்பெருமானை வணங்குகிறார்கள். 2920

167. செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடைய எம்பெருமான் திருவேங்கடத் திருமலையில் உறைகின்றான். கனி போன்ற அதரத்தை உடைய அவனது மேனி நீல ரத்னம் போல் உள்ளது. நித்ய சூரிகளின் தலைவன் மாயங்கள் பல செய்தவன். அவன் இருக்கும் தலமோ தெளிவையும் நிறைவையுமுடைய சுனைநீர் பொருந்தியது. 2921

168. ஈசன்வானவர்க் கென்பன் என்றால் *அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு
நீசனேன் நிறைவொன்று மிலேன்* என்கண்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே. 2922 (3-3-4)

169. சோதியாகி எல்லாவுலகும் தொழும்*
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ ?*
வேதியர் முழு வேதத்தமு தத்தை*
தீதில் சீர்த்திருவேங்கடத்தானையே. 2923 (3-3-5)

170. வேங்கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்*
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்*
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாம் கடமை *அது சுமந்தார் கட்கே. 2924 (3-3-6)

171. சுமந்து மாமலர் நீர்சுடர் தூபம் கொண்டு*
அமர்ந்து வானவர் வானவர் கோனொடும்*
நமன்றெழும் திருவேங்கடம் நங்கட்கு*
சமன் கொள் வீடு தரும் தடங்குன்றமே. 2925 (3-3-7)

172. **குன்ற மேந்திக் குளிர்மழை காத்தவன்*
அன்று ஞாலம் அளந்தபிரான் *பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை*
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே. 2926 (3-3-8)

173. ஓயும் மூப்புப் பிறப்பு இறப்புப் பிணி*
வீயுமாறு செய்வான் திருவேங்கடத்து
ஆயன் *நாள்மலராம் அடித்தாமரை*
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே. 2927 (3-3-9)

74. வைத்த நாள்வரை எல்லை குறுகிச் சென்று*
எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ*
பைத்தபாம் பணையான் திருவேங்கடம்*
மொய்த்த சோலை மொய்பூந்தடம் தாழ்வரே. 2928 (3-3-10)

168. எம்பெருமானை நோக்கி நித்திய சூரிகளின் தலைவன் என்று சொல்லுவேன். எல்லோருக்கும் தாழ்ந்தவனுன அடியேனிடம் பாசம் வைத்துள்ள திருவேங்கடமுடையானுக்கு இது புகழ் ஆகுமோ? 2922

169. வேதங்களை அறிந்த அந்தணர்களுக்குச் செல்வமான வேதத்தில் சொல்லப்படும் அமுதமயமானவன். தீது இல்லாத சிறப்புப் பொருந்திய திருவேங்கடத்திருமலையானை சோதி மயமானவன் எல்லா உலகும் தொழத்தக்க முழு முதற்காரணனான ஆதி மூர்த்தி என்று சொன்னால் அது பெருமையாகுமா ? 2923

170. திருமலையிலே நித்தியவாசம் செய்தருளுகிற பெருமானுக்கு நாம் வணக்கம் சொன்னல் நமது பாவங்கள் எல்லாம் அழிந்து போகும். இப்படிப் பாவங்கள் தொலையவே, அடியவர்களாகிய அவர்கள் தங்களுக்கேற்ற கைங்கர்யத்தையே செய்வார்கள். 2924

171. சிறந்த புஷ்பங்களையும், தீர்த்தத்தையும், தீபத்தையும், தூபத்தையும் ஏந்திக் கொண்டு சேனை முதலியுடன் நித்ய சூரிகள் திருவேங்கடவனை வணங்குகிறார்கள். அந்தத் தலமே நமக்கு ஏற்றதான மோட்சத்தைக் கொடுக்கக் கூடிய மலையாகும். 2925

172. எம்பெருமான் கண்ணனுக அவதாரம் செய்து பசுக்களைக் காப்பாற்ற கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தான். அவனே முன்னொரு காலத்தில் உலகங்களை அளந்த எம்பெருமான். அப்பெருமான் எழுந்தருளியுள்ள திருமலை ஒன்றை மாத்திரமே நாம் வணங்கினுல் நமது வினைகள் யாவும் நம்மை விட்டுப் போய் விடும். 2926

173. திருவேங்கட நாதனுன கண்ணன் நமது நோய்களைத் தீர்ப்பவன் ஆவான். அவனுடைய செந்தாமலரைப் போன்ற திருவடிகளை மனதில் வைத்து வாயால் துதித்தால் அவன் நமது பிறப்பு, இறப்பு, பிணி இவைகளைப் போக்கி நமக்கு அருள் செய்வான். 2927

174. திருவேங்கட மலையில் ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்ட பெருமான் தங்கி உள்ளான். பூக்கள் நிறைந்த சோலைகளையும், குளங்களையும் கொண்ட வேங்கடவனைத் தொழுவதற்கு, அம்மலையின், தாழ்வரையை அடையுங்கள். உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆயுட்காலம் முடிவதற்கு முன் நீங்கள் மிகவும் தளர்ச்சியடைவதற்கு முன்னே அம்மலையை அடைந்து வணங்குங்கள். 2928

175. **தாள் பரப்பி மண்தாவிய ஈசனை*
நீள்பொழில் குருகூர்ச் சடகோபன் சொல்*
கேழிலாயிரத்து இப்பத்தும் வல்லவர்*
வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே. 2929 (3-3-11)

176. வார்புனல் அந் தண் அருவிவட திருவேங்கடத்தெந்தை*
பேர்பல சொல்லிப் பிதற்றிப் பித்தரென்றே பிறர் கூற*
ஊர் பலபுக்கும் புகாதும் உலோகர் சிரிக்க நின்றாடி*
ஆர்வம் பெருகிக் குனிப்பார் அமரர் தொழப் படுவாரே.
2948 (3-5-8)

177. **சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ*
என்னாவில் இன் கவியானொருவர்க்கும் கொடுக்கிலேன்*
தென்னா தெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத்து*
என்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே.
2985 (3-9-1)

178. **மாரிமாறாத தண்ணம்மலை வேங்கடத்தண்ணலை*
வாரி மாறாத பைம் பூம் பொழில் சூழ் குருகூர் நகர்*
காரிமாறன் சடகோபன் சொல்லாயிரத்து இப்பத்தால்*
வேரிமாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே. 3061 (4-5-11)

(ஆழ்வார் எம்பெருமானோடு கலந்து வாழப் பெறாமையால் மிக நைந்து, தம் உடைமைகள் தாமே தம்மை விட்டு அகன்றமையை, பிரிந்து வருந்தும் தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கும் பாசுரத்தால் அருளிச் செய்தல்)

179. **மாலுக்கு வையமளந்த மணாளற்கு*
நீலக் கருநிற மேகநியாயற்கு*
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு* என்கொங்கலர்
ஏலக் குழலி இழந்தது சங்கே. 3282 (6-6-1)

175. திருவடிகளைப் பரப்பி பூமியை அளந்த பெருமானை திருக்குருகூர்ச்சடகோபன் துதித்தார். அவர் அருளிச் செய்துள்ள ஆயிரம் பாசுரங்களில் இப்பத்துப் பாசுரங்களை ஓதவல்லவர்கள் உலகத்தோர் போற்றும்படி பாக்கியங்களைப் பெற்று வாழ்வார்கள். 2929

176. மிகவும் குளிர்ச்சி பொருந்திய திருவேங்கட மலையில் என் தந்தையான சுவாமி எழுந்தருளி உள்ளான். அவன் திருநாமங்களைப் பலபடியாக உச்சரித்துப் பைத்தியக்காரரோ என பிறர் சொல்லுகிற அளவுக்கு பக்தியினுல் ஊர்கள் தோறும் திரிந்து செல்வர். அத்தகைய பாகவதர்கள், தேவர்களால் வணங்கப்படுவார்கள். 2948

177. நீங்கள் நான் சொல்லுவதை விரோதமாகக் கருதலாம். ஆகிலும் உங்களுக்குத் தேவையான நன்மைகளைச் சொல்லுவேன். வேங்கடத்தில் உள்ள பெருமான் என் யானை போன்றவன். என் ஸ்வாமி எனக்கு இருக்கும் போது, அவனை விட்டு இன்கவிகளை நான் வேறு ஒருவருக்கும் கொடுக்க மாட்டேன். 2985

178. குளிர்ந்த திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையானைச் சடகோபர் ஆயிரம் பாசுரங்களில் துதித்தார். திருக்குருகூரில் அவதரித்த காரிமாறனுன அச்சடகோபன் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் பாட வல்லவர் மஹாலக்ஷ்மியின் அருள் பெறுவார். அவருடைய வினைகள் தீர்ந்து போகும். 3061

179. நறுமணம் மிக்க கூந்தலையுடைய என் மகள் திருமாலின் குணங்களிலும், செயல்களிலும் ஈடுபட்டுத் தன்னை இழந்து விட்டாள். கரிய மேகம் போன்ற நிறம் ; தாமரையை ஒத்த திருக்கண்களையுடைய அத்திருமால் பூமி முழுவதையும் அன்று அளந்த திருவிக்கிரமன். அவனுக்கு இவள் தோற்றுப் போய், தன் கையில் அணிந்துள்ள வளையலை இழந்தாள். 3882

180. சங்கு வில்வாள் தண்டு சக்கரக் கையற்கு*
செங்கனிவாய்ச் செய்ய தாமரைக் கண்ணற்கு*
கொங்கலர் தண்ணந்துழாய் முடியானுக்கு* என்
மங்கை யிழந்தது மாமைநிறமே. 3283 (6-6-2)

181. நிறங்கரியானுக்கு நீடுல குண்ட*
திறங்கிளர் வாய்ச் சிறுக் கள்வனவற்கு*
கறங்கிய சக்கரக் கையவனுக்கு *என்
பிறங்கிருங் கூந்தல் இழந்தது பீடே. 3284 (6-6-3)

182. பீடுடை நான்முகனைப் படைத்தானுக்கு*
மாடுடை வையம் அளந்த மணாளற்கு*
நாடுடை மன்னர்க்குத் தூது செல் நம்பிக்கு *என்
பாடுடை யல்குல் இழந்தது பண்பே. 3285 (6-6-4)

183. பண்புடை வேதம் பயந்த பரனுக்கு*
மண்புரை வையம் இடந்த வராகற்கு*
தெண்புனற் பள்ளி எம்தேவ பிரானுக்கு* என்
கண்புனை கோதை இழந்தது கற்பே. 3286 (6-6-5)

184. கற்பகக்காவன நற்பல தோளற்கு
பொற் சுடர்க் குன்றன்ன பூந்தண் முடியற்கு*
நற்பல தாமரை நாள் மலர்க் கையற்கு *என்
விற்புருவக் கொடி தோற்றது மெய்யே. 3287 (6-6-6)

185. மெய்யமர் பல்கலன் நன்கணிந்தானுக்கு*
பையரவினணைப் பள்ளியினானுக்கு*
கையொடு கால் செய்ய கண்ணபிரானுக்கு *என்
தையல் இழந்தது தன்னுடைச் சாயே. 3288 (6-6-7)

180. பஞ்சா யுதங்களையும் தன் திருக்கையிலே உடையவரும், கனி போன்ற அதரத்தையும், தாமரை போன்ற கண்களையுடையவரும், திருத்துழாய் மாலை அணியப் பெற்ற திருமுடி கொண்ட அப்பெருமானிடம் இப்பெண் தன்னை இழந்து விட்டதனுல் தன் அழகிய நிறத்தை இழந்து விட்டாள். 3283

181. கரிய நிறமுடைய எம்பெருமான் பிரளய காலத்தில் சகல உலகங்களையும் விழுங்கித் தன் வயிற்றில் வைத்துக் காப்பாற்றினுன். சுழலும் சக்கரத்தைத் தன் கையிலே உடையவனுயிருக்கிறுன். இத்தகைய அவனுக்கு கரிய கூந்தலையுடைய என் பெண் தன் பெருமையை இழந்து விட்டாள். 3284

182. பெருமை பொருந்திய பிரமனை தனது நாபிக் கமலத்தில் படைத்தான் எம்பெருமான். செல்வச் செழிப்புடைய இவ்வுலகத்தை அளந்த மணவாளன் அவன். பஞ்ச பாண்டவர்களுக்காக தூது சென்ற பெருமான் அவன். இத்தகைய பெருமைகளை உடைய பெருமானிடத்தே இடை அழகுடைய என் பெண் தன் பண்பை இழந்து விட்டாள். 3285

183. சீர்மை மிக்க வேதங்களை எம்பெருமான் நான்முகனுக்கு உபதேசித்தான். அப்பெருமையுடைய பெருமானே உலகத்தை மேலே எடுத்து வருவதற்கு வராஹ அவதாரம் எடுத்தான். தெளிந்த நீரையுடைய பிரளயகாலத்தில் அதன் மீது பள்ளி கொண்டான். இப்படிப்பட்ட தேவபிரானிடம் கண்ணைக் கவர்கின்ற கூந்தலையுடைய என் மகள் இழந்தது தன் கல்வியாகிய அறிவை. 3286

184. எம்பெருமான் கற்பகச் சோலை போன்ற நல்ல பலதோள்களை உடையவன். மிக அழகிய பூக்கள் சூட்டப்பட்ட திருமுடியை உடையவன். கைகள் அன்றலர்ந்த தாமரை மலரைப் போலிருந்தன. இப்படிப்பட்ட அழகான அவனிடம் வில் போன்ற புருவத்தையுடைய என் பெண் இழந்தது தன் உடம்பை. 3287

185. எம்பெருமான் தன் திருமேனிக்குப் பொருத்தமான பல ஆபரணங்களை நன்றாக அணிந்து கொண்டிருப்பவன். ஆதிசேஷனுகிய பாம்பினைத் தன் படுக்கையாகக் கொண்டு பள்ளி கொண்டிருப்பவன். சிவந்த திருக்கைகளும், திருவடிகளும் உடைய கண்ணபிரான் மீது என் மகள் காதல் கொண்டதால் அவள் தனது ஒளியை இழந்து விட்டாள். 3288

186. சாயக்குருந்தம் ஒசித்த தமியற்கு*
மாயச் சகடம் உதைத்த மணாளற்கு*
பேயைப் பிணம் படப் பாலுண்பிரானுக்கு *என்
வாசக்குழலி இழந்தது மாண்பே. 3289 (6-6-8)

187. மாண்பமை கோலத்து எம்மாயக் குறளற்கு*
சேண் சுடர்க் குன்றன்ன செஞ்சுடர் மூர்த்திக்கு*
காண் பெருந்தோற்றத்து எம் காகுத்த நம்பிக்கு* என்
பூண்புனை மென்முலை தோற்றது பொற்பே. 3290 (6-6-9)

188. பொற்பமை நீள்முடிப் பூந்தண் துழாயற்கு*
மற்பொரு தோளுடை மாயப் பிரானுக்கு*
நிற்பன பல்லுருவாய் நிற்கு மாயற்கு *என்
கற்புடையாட்டி இழந்தது கட்டே. 3291 (6-6-10)

189. **கட்டெழில் சோலை நல்வேங்கட வாணனை*
கட்டெழில் தென்குரு கூர்ச்சடகோபன் சொல்*
கட்டெழி லாயிரத்து இப்பத்தும் வல்லவர்*
கட்டெழில் வானவர் போகமுண்பாரே. 3292 (6-6-11)

(அலர்மேல் மங்கை புருஷகாரமாகத் திருவேங்கட
முடையானது திருவடிகளில் சரணம் புகுதல்)

190. **உலகமுண்ட பெருவாயா ! உலப்பில் கீர்த்தி யம்மானே !*
நிலவும் சுடர் சூழொளி மூர்த்தி ! நெடியாய் ! அடியேனுருயிரே !*
திலதமுல குக்காய் நின்ற திருவேங்கடத்து எம் பெருமானே !*
குல தொல்ல டியேன் உனபாதம் கூடுமாறு கூறுயே.
3326 (6-10-1)

186. அசுரன் உட்புகுந்ததால் குருந்த மரத்தை வேருடன் சாய்ந்து விழும் படி செய்தவனாகிய கண்ணபிரான் அவ்வசுரனைக் கொன்றான். சகடாசுரன் இறக்கும்படி அவன் மறைந்திருந்த வண்டியை உதைத்தான். பூதனை இறக்கும்படி முலைப் பால் குடிப்பது போல் பாவனை செய்து அவள் உயிரை உறிஞ்சிய பெருமான் ஆவான். இத்தகைய கண்ணனுக்கு என் மகள் தன் மாண்பினை இழந்து விட்டாள். 3289

187. மிக்க அழகுடன் வாமனனாகத் தோன்றினான் எம்பெருமான். ஒளி மயமான திருவுடம்பு உடையவன். அனைத்துலகும் காணப் பெற்ற இனிய தோற்றத்தையுடையவனான ஸ்ரீ ராமபிரான் குணங்கள் நிறைந்த நம்பியாவான். இப்படிப்பட்ட எம்பிரானிடம் ஆபரணங்களை அணிந்த மெல்லிய மார்பையுடைய என் மகள் தன் அழகினைத் தோற்றாள். 3290

188. அழகிய தன்னுடைய நீண்ட திருமுடியிலே எம்பெருமான் அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலை சூடியுள்ளான். மல்லர்களோடு போர் செய்த திருத்தோள்களை உடையவன். எல்லாவற்றிலும் அந்தர் யாமியாய் இருப்பவன் எம்பிரான். மேலே கூறப்பட்ட எல்லாப் பெருமைகளையும் உடைய எம்பிரானிடம் மிக்க அறிவுடையளான என் மகள் தன் மரியாதையை இழந்து விட்டாள். 3291

189. நறுமணம் மிக்க சோலைகள் சூழ்ந்த திருவேங்கட மலையிலே வாழ்பவனான எம்பெருமானை அழகுள்ள தென்குருகூரில் அவதரித்த ஆழ்வார் அருளிச் செய்த தம் ஆயிரம் பாசுரங்களில் இப்பத்தினையும் பயிலவல்லவர்கள் நித்திய சூரிகளின் அநுபவத்தைப் பெறுவார்கள். 3292

190. பிரளய காலத்தில் உலகங்களை எல்லாம் தன் வயிற்றில் வைத்த பெரிய வாயை உடையவனே ! முடிவில்லாத புகழ்வடிவான அம்மானே! உலகுக் கெல்லாம் திலகம் போன்றதான திருமலையிலே உறைகின்றவனே ! உனக்கே நெடுங்காலமாகத் தொண்டு செய்து வருகின்ற குலத்தில் வந்த அடியேன் உன் திருவடிகளை வந்து சேரும் படியை அருளிச் செய்ய வேணும். 3326

191. கூறாய் நீறாய் நிலனாகிக் கொடு வல்ல சுரர் குல மெல்லாம்*
சீறா எறியும் திருநேமி வலவா ! தெய்வக் கோமானே !*
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும் திருவேங்கடத் தானே !*
ஆறாவன் பிலடியேன் உன்னடி சேர் வண்ணம் அருளாயே.
3327 (6-10-2)

192. வண்ணமருள் கொளணி மேக வண்ணா ! மாய வம்மானே !*
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே !இமையோரதி பதியே !*
தெண்ணலருவி மணிபொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானே !*
அண்ணலே ! உன்னடிசேர அடியேற்கு ஆவா வென்னாயே.
3328 (6-10-3)

193. ஆவா ! என்னாது உலகத்தையலைக்கும் அசுரர் வாணாள் மேல்*
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா! திருமாமகள் கேள்வா !
தேவா !* சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!*
பூவார் கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே.
3329 (6-10-4)

194. புணரா நின்ற மரமேழ் அன்றெய்த ஒரு வில் வலவாவோ!*
புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல் வாவோ !*
திணரார் மேகமெனக் களிறு சேரும் திருவேங்கடத்தானே !*
திணரார் சார்ங்கத்து உனபாதம் சேர்வதடியேன் எந்நாளே?
3330 (6-10-5)

195. எந்நாளே ? நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கென்று*
எந்நாளும் நின்று இமையோர்களேத்தி இறைஞ்சி இனமினமாய்*
மெய்ந்நாமனத்தால் வழிபாடு செய்யும் திருவேங்கடத்தானே !*
மெய்ந்நானெய்தி எந்நாள் உன்னடிக்கண் அடியேன் மேவுவதே?
3331 (6-10-6)

191. நித்திய சூரிகளுக்குத் தலைவனே ! மிகக் கொடிய அசுரர்களின் கூட்டமெல்லாம் உன் சக்ராயுதத்தால் கூறு கூறாகத் துண்டங்களாக்கப் பட்டு, சாம்பலாக்கப் பட்டு, மண்ணோடு மண்ணாக்கப்பட்டு மீண்டும் உன் திருக்கரங்களில் ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. நீ எங்களுக்காக திருவேங்கடத்தில் எழுந்தருளி உள்ளாய். சேறு நிரம்பிய சுனைகளிலே செந்தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கும் அழகிய திருவேங்கடத்தில் உள்ளவனே ! குறைவற்ற அன்புடைய அடியேன் உன் திருவடியைச் சேரும்படி அருள் புரிய வேணும். 3327

192. அருள் வடிவமானவனே ! அழகிய மேகத்தைப் போன்ற நிறத்தை உடையவனே ! என் நெஞ்சக்குள் புகுந்து தித்திக்கின்ற அமிருதமானவனே! நித்திய சூரிகளின் தலைவனாகயிருந்தும் எங்களுக்காக திருமலையிலே எழுந்தருளி உள்ளவனே ! உன் திருவடிகளில் வந்து சேரும்படி எனக்காக இரங்கி அருள் செய்ய வேண்டும். 3328

193. உலகத்தவர் மீது இரக்கமின்றி அசுரர்கள் அவர்களை வதைப்பார்கள். அக்கொடிய அசுரர்களை அம்புக் கூட்டங்களால் அழித்து வில்லேந்திய பெருமானே ! பெரிய பிராட்டியாரின் நாயகனே! தேவர்களும், முனிவர்களும் விரும்பும் திருவேங்கடத்தானே! புஷ்பங்கள் நிறைந்த உனது திருவடிகளை மகாபாபியான நான் அடையுமாறு அருள் செய்ய வேண்டும். 3329

194. பகவானே ! இராமாவதாரத்தில் ஒன்றோடொன்று நெருங்கி நின்ற ஏழு மாமரங்களையும் அம்பு எய்த ஒப்பற்ற வீரனே ! கிருஷ்ணாவதாரத்தில், சேர்ந்து நின்ற இரண்டு மருத மரங்கள் நடுவே சென்றவனே ! நீயே மூலபுருஷனுவாய் ! நீயே திருவேங்கட மலையில் எங்களுக்காக எழுந்தருளியுள்ளாய் ! நீ திண்ணம் மிக்க சார்ங்கம் என்னும் வில்லினைத் தாங்கியுள்ளாய். உனது திருவடிகளை அடியேன் அணுகப் பெறுவது எந்நாளோ ? அதற்கு அருள் செய்வாயாக. 3330

195. உலகத்தை அளந்த திருவடிகளை என்று காண்போம் என்று ஆசைப்பட்டு நித்ய சூரிகள் பகவானைக் கண்டு துதிக்க திருவேங்கட மலைக்கு வருகிறார்கள். அவர்கள் தங்கள் மெய், நாக்கு, மனம் ஆகிய முக்கரணங்களால் எம்பெருமானைத் திருமலையில் வழிபடுகிறார்கள். அப்படிப்பட்ட பெருமானே ! அடியேனாகிய நான் உன் தன்திருவடிகளை அடைவது என்றைக்கோ ? 3331

196. அடியேன் மேவியமர்கின்ற அமுதே ! இமையோரதி பதியே !*
கொடியாவடு புள்ளுடையானே ! கோலக் கனிவாய்ப் பெருமானே !*
செடியார் வினைகள் தீர் மருந்தே ! திருவேங்கடத்தெம் பெருமானே!*
நொடியார் பொழுதும் உனபாதம் காண நோலாதாற்றேனே.
3332 (6-10-7)

197. நோலாதாற்றேன் உனபாதம் காண வென்று நுண்ணுணர்வின்*
நீலார் கண்டத்தம்மானும் நிறை நான் முகனும் இந்திரனும்*
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும் திருவேங்கடத்தானே !*
மாலாய் மயக்கி அடியேன்பால் வந்தாய் போலே வாராயே.
3333 (6-10-8)

198. வந்தாய் போலே வாராதாய் வாராதாய் போல் வருவானே !*
செந்தாமரைக் கண் செங்கனிவாய் நால்தோள் அமுதே ! எனதுயிரே!*
சிந்தாமணிகள் பகரல்லைப் பகல்செய் திருவேங்கடத்தானே !*
அந்தோ ! அடியேன் உனபாதம் அகல கில்லேன் இறையுமே.
3334 (6-10-9)

199. **அகல கில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை யுறைமார்பா!*
நிகரில் புகழாய் ! உலகம் மூன்றுடையாய் ! *
என்னை யாள்வானே !*
நிகரில்மரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே !*
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.
3335 (6-10-10)

196. உன்னை அனுபவிப்பதைத் தவிர வேறு பயன் வேண்டாத அமுதமே ! நித்திய சூரிகள் தலைவனே ! பகைவரை அழிக்க வல்ல கருடனைக் கொடியாகவுடையவனே ! பாவங்களைத் தீர்க்கும் மருந்தே! திருவேங்கடத்து எம்பெருமானே ! நான் உன்னை அடைய எந்த ஒரு நோன்பும் அனுஷ்டிக்க வில்லை. அப்படியிருந்தும் உன் திருவடிகளைக் காணமல் நான் சிறிதும் பொறுக்க மாட்டேன். 3332

197. எம்பெருமானே ! உன்னை அடைவதற்கு நான் எந்தவித நோன்பும் அநுஷ்டிக்கவில்லை. நான் மட்டும் அப்படிக் கூறவில்லை. நுட்பமான அறிவு உடைய சிவபிரானும், ஞானசக்திகள் நிறைந்த பிரமனும், இந்திரனும் உன் திருவடிகளைக் காண்பதற்கு எந்தவிதமான சாதனநுஷ்டானமும் செய்யவில்லை என்றே சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் மாதர்கள் பலரோடும் திருமலைக்கு உன்னைச் சேவிக்க வந்துள்ளனர். இத்தகைய பெருமை உடையவன் நீ ! நீ எல்லோரையும் மயக்குவதற்குக் கிருஷ்ணனாக வந்தது போலே அடியேனிடமும் வர வேண்டும். 3333

198. பெருமானே ! நீ என் மனத்திலே புகுந்த பொழுது நான் அநுபவிக்கும் இன்பம் போதாதென்று, புறத்தேயும் உன்னைத் தொட்டுப் பயில விழைந்தால், என் கைகளுக்கு எட்டாதவனாய் நீ வராதவன் போலேயிருக்கிறாய். நீ வர மாட்டாய் என்று நினைத்தவுடன் திடீரென்று புகுந்து என்னிடம் வருகிறாய். செந்தாமரை போன்ற கண்கள், கனி போன்ற உதடுகளையும், நான்கு திருத்தோள்களையும் கொண்ட இனியவனே ! எனக்கு உயிரானவனே ! சிறந்த இரத்தினங்களின் ஒளியானது இரவையும் பகலாக்கும் இடமான திருமலையில் வாழ்பவனே ! ஐயோ ! உன் திருவடிகளை ஒரு நொடியும் அடியேனால் பிரிந்திருக்க முடியாது. 3334

199. கணநேரமும் பிரிந்திருக்க மாட்டேன் என்று கூறும் பெரிய பிராட்டியார் எப்போதும் வாழும் மார்பையுடைய எம்பெருமானே ! ஒப்பற்ற புகழ் உடையவனே ! மூன்று உலகங்களுக்கும் அதிபதியே ! என்னையும் அடிமை கொள்பவனே ! ஒப்பற்றவர்களான தேவர்களும், முனிவர்களும் விரும்பி வந்து பணியுமிடமான திருமலையில் வாழ்பவனே! உன்னையன்றி வேறுகதி இல்லாத உனக்கே ஆட்பட்ட அடியேன் உன் திருவடியில் சரணம் புகுந்தேன். நீ அடைக்கலம் தந்து என்னை ஆட் கொள்ள வேண்டும். 3335

200. **அடிக்கீழ மர்ந்து புகுந்து அடியீர் ! வாழ்மினென்றென்றருள்
கொடுக்கும்*
படிக்கேழில்லாப் பெருமானைப் பழனக் குருகூர்ச் சடகோபன்*
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக் கிவைபத்தும்*
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே.
3336 (6-10-11)

201. **நங்கள் வரிவளையாயங்காளோ ! நம்முடையே தலர் முன்பு நாணி*
நுங்கட்கு யானென்றுரைக்கும் மாற்றம் நோக்குகின்றேன்
எங்கும் காண மாட்டேன்*
சங்கம் சரிந்தன சாயிழந்தேன்தட முலை பொன்னிறமாய்த்
தளர்ந்தேன்*
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன் வேங்கட வாணனை
வேண்டிச் சென்றே.
3458 (8-2-1)

202. இன்றிப்போக இருவினையும் கெடுத்து*
ஒன்றியாக்கை புகாமை உய்யக் கொள்வான்*
நின்ற வேங்கடம் நீள் நிலத்து உள்ளது*
சென்று தேவர்கள் கை தொழுவார்களே. 3586 (9-3-8)

203. மேயான் வேங்கடம் *
காயா மலர் வண்ணன்*
பேயார் முலையுண்ட*
வாயான் மாதவனே. 3716 (10-5-6)

204. **திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே என் தலையே*
திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே எனதுடலே*
அருமாமாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே*
ஒரு மாநொடியும் பிரியான் என் ஊழி முதல்வன் ஒருவனே.
3740 (10-7-8)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

200. திருவேங்கடமுடையான் அடியார்களை, ''நீங்கள் என் திருவடிகளில் சரணம் அடைந்து நற்கதி பெறுங்கள்'' என்று திருவடிகளைக் காட்டி அருள் பாலிக்கின்றான். இப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற அப்பெருமானை திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார் இப்பத்துப் பாசுரங்களால் பாடினர். திருவேங்கட மலை விஷயமான இத்திருவாய் மொழியைக் கற்ற அடியார்கள் பரமபதத்திலே நிலையாக வீற்றிருப்பார்கள். 3336

201. வளையல்களை அணிந்துள்ள என்னுடைய தோழியர்களே! வெட்கத்தை விட்டு உங்களிடம் மட்டும் ஒன்று சொல்கிறேன். என்னுடைய நெஞ்சம் திருவேங்கட நாதனிடம் சென்று விட்டது. கருடப் பறவை மீது வரும் அந்த எம்பெருமானைக் காதலித்ததால் நான் அவனிடம் சென்றேன். அங்கு சென்றும் என் ஆசை நிறைவேற வில்லை. உடல் மெலிந்து என் கை வளைகள் விழுந்து விட்டன. ஒளி இழந்து விட்டேன். மார்பகங்களும் பொன்னிறமாகப் பசலை அடைந்து விட்டன. உடல் தளர்ந்து விட்டேன் 3458

202. எம்பெருமான் நம்முடைய நல்வினை, தீவினை இரண்டையும் வாசனை இல்லாமல் அழித்து விடுவான். வேறு பிறவியும் கிடையாது. இப்படி நம்மைக் காக்க வல்ல பெருமான் திருமலையில் நமக்காக நின்ற கோலத்தில் உள்ளான். இந்தத் திருவேங்கடம் நம்பொருட்டு மண்ணுலகிலேயே இருக்கிறது. ஆகவே இதை விடலாகாது. இங்கே தேவர்களும் கூட வந்து தொழுகிறார்கள். திருமலைக்கும், பரமபதத்துக்கும் வித்தியாசம் இல்லை. 3586

203. பகவான் காயாம்பூப்போன்ற திருமேனி உடையவன். அரக்கி பூதனையின் முலை சுவைத்து அவளைக் கொன்ற திருவாய் உடையவன். லக்ஷ்மி நாதன் அவன். அவன் திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ளான். 3716

204. பகவான் திருமலையோடும் திருப்பாற் கடலோடும் ஒக்க என் தலையை விரும்பினன். திருமாலின் வைகுந்தத்தையும் குளிர்ந்த திருவேங்கடத் திருமலையையும் இவர் திருமேனியை ஒக்க விரும்பினான். இத்தகைய அரிய பெரிய மாயம் பொருந்திய என் உயிரையும் மனத்தையும் வாக்கையும், கருமத்தையும் சிறிது கூட பிரிந்திருக்க மாட்டான். அவனே எல்லாப் பூதங்களுக்கும் மூலபுருஷன் ஆவான். 3740

# ஸ்ரீ ராமானுஜர்

"திருவேங்கடத்திலகம்" என்னும் இந்நூலை எழுதத் தொடங்கிய போது, பகவத்ராமானுஜரின் திருமலை விஜயம் எங்கள் மனக்கண்முன் தோன்றியது. ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும், வைணவத் திருத்தலங்களையும் நாம் எண்ணிப் பார்க்கும் போது ஸ்ரீ ராமானுஜர் ஆற்றிய அரிய தொண்டுகள் நம் கவனத்திற்கு வருகின்றன. ஆகவே ஸ்ரீராமானுஜரின் வாழ்க்கையைப் பற்றி சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

ஸ்ரீ வைஷ்ணவர்களின் இல்லங்களிலும், கோவில்களிலும் நாள்தோறும் திவ்யப்பிரபந்தங்களை ஓதிய பின், எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களுமே "ஸர்வ தேச தசாகாலே . . . ." என்றும் தொடங்கும் இரண்டு சுலோகங்களை சாத்துமுறை காலத்தில் சேவிப்பது வழக்கம். அதாவது எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும் எல்லாக் காலங்களிலும் ராமானுஜரின் ஆணை வளரட்டும் என்பதே அதன் பொருளாகும்.

சென்னைக்கு அருகில் உள்ள ஸ்ரீ பெரும்புதூரில் கி.பி. 1017ஆம் ஆண்டு சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆசூரி கேசவாசாரியர் காந்திமதி அம்மையார் தம்பதிகளுக்கு ராமானுஜர் திருக்குமாரராய் அவதரித்தார்.

முறைப்படி கல்வியும், பதினாறாவது வயதில் திருமணமும் ராமானுஜரின் பெற்றோர் செய்து வைத்தனர்.

பின் காஞ்சியில் யாதவப் பிரகாசர் என்ற அத்வைதப் பண்டிதரிடம் ராமானுஜர் வேதாந்தம் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். ஆனால் சிறிது காலத்திற்குள் அவரிடம் செல்வதை ராமானுஜர் நிறுத்திக் கொண்டார். ஏனெனில் அன்னாரின் வியாக்கியானங்கள் ராமானுஜரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. திருக்கச்சி நம்பியிடம் ராமானுஜருக்கு மிக்க ஈடுபாடு உண்டு.

ஆளவந்தாரின் விசேஷமான ஞானத்தைப் பற்றி ராமானுஜர் கேள்விப்பட்டிருந்தார். ஆளவந்தாரும் ராமானுஜரைப் பற்றி கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் ஒருவரை ஒருவர் நேரில் பார்த்துக் கொள்ளவில்லை. ஆளவந்தார் காலமானபிறகு அவருடைய சரமதிருமேனியைத் தான் ராமானுஜர் சேவித்தார். ஆளவந்தாரின் உள்ளத்தில் இருந்த மூன்று பணிகளையும் நிறைவேற்ற ராமானுஜர் உறுதி பூண்டார்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு தம் சீடரான திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கொண்டு ஆறாயிரப்படி வியாக்கியானம் எழுதச் செய்தார். பிரம்ம சூத்திரங்களுக்கு விசிஷ்டாத்வைத நெறியின்படி விளக்கம் அருளினார். வேதவியாசர், பராசரபட்டர் இவர்களின் திருப் பெயர்களை சிறந்த வைணவர்களுக்கு வைப்பதாகவும் கூறினார்.

ராமானுஜருக்கு இல்லற வாழ்க்கையில் மனநிறைவு இல்லை. ஆகவே துறவு வாழ்க்கையை ஏற்றார்.

பெரிய நம்பியை ஆசாரியனாக அடைந்து காஞ்சியில் அவரிடம் ராமாநுஜர் திவ்யப் பிரபந்தங்களைக் கற்றார். பின் காஞ்சிப் பேரருளாளனின் இசைவுடன் ராமாநுஜர் ஸ்ரீரங்கம் வந்தார். பெருமுயற்ச்சிக்குப் பிறகு, திருக்கோட்டியூர் நம்பியிடம் திருமந்திரம் உபதேசம் பெற்றார். அதை அனைவருக்கும் உபதேசம் செய்து திருக்கோட்டியூரில் கூடியிருந்தோரை பெரும் பேறு பெற்றவர்கள் ஆக்கினார். இதைக் கேள்வியுற்ற திருக்கோட்டியூர் நம்பி ராமாநுஜரிடம் மிகுந்த கோபம் கொண்டார். ராமாநுஜர் அவரிடம் அடியேன் ஒருவன் நரகத்துக்குப் போனாலும், மற்றவர்கள் மோட்சம் செல்வார்கள் என்ற மனநிறைவு எனக்கு இருக்கிறது. திருக்கோட்டியூர் நம்பி ராமாநுஜரின் பரந்த உள்ளத்தை வியந்து பாராட்டினார். இதுவரை ராமாநுஜருக்கு முன்பிருந்த ஆசார்யர்கள் ஓரான் வழியாகவே உபதேசித்து வந்தார்கள். ஆனால் ராமாநுஜர் ஆசையுடையோர்க்கெல்லாம் உபதேசித்தார்.

ராமாநுஜர் திருவேங்கடமுடையானைச் சேவிக்க திருமலைக்குச் சென்றார். பெரிய திருமலை நம்பி அவரை அன்புடன் வரவேற்றார். வேங்கடவனைக் கண்குளிர சேவித்துப் பேரானந்தம் அடைந்தார். பெரிய திருமலை நம்பியிடம் ஸ்ரீராமாயணத்தின் ஆழ்ந்த உட்கருத்துக்களை கேட்டறிந்தார்.

ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தியவர் ஸ்ரீராமாநுஜர். தன் வாழ்நாளில் பெரும்பகுதியை திருவரங்கத்தில் கழித்தார். அரங்கன் கோயில் கைங்கர்யம் என்றென்றும் குறைபாடின்றி நடைபெற வழிமுறைகளை வகுத்துக் கொடுத்தார். அது இன்றளவும் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. பெரிய பெருமாளும் தம் உபயவிபூதி ஐச்வர்யத்தையும் இவருக்கு உடைமையாக்கி வைத்து மகிழ்ந்தார். அதனால் இவர் உடையவர் என்று அழைக்கப்பட்டார்.


பகவத் ராமாநுஜர் திருவனந்தாழ்வானின் அவதாரம் என்பர். ஸ்ரீ ராமாநுஜரால் ஸ்தாபிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தத்துவ தரிசனம் விசிஷ்டாத்வைதம் ஆகும். சித், அசித், ஈஸ்வரன் ஆகிய தத்துவங்களைக் கொண்டது விசிஷ்டாத்வைதம். ஸ்ரீ வைஷ்ணவம் தழைத்து வளர ஸ்ரீராமாநுஜர் செய்த சேவை மகத்தானது ஆகும். ராமாநுஜர் வளர்த்தபடியாலே இந்த சமயத்திற்கு ராமாநுஜ தரிசனம். எம்பெருமானார் தரிசனம் எனவும் வழங்கப்படுகின்றது.

ராமாநுஜர் அருளிய நூல்கள் ஒன்பதாகும். 1) வேதார்த்த ஸங்க்ரஹம் 2) ஸ்ரீபாஷ்யம் 3) கீதாபாஷ்யம் 4) வேதாந்த தீபம் 5) வேதாந்த ஸாரம் 6) சரணாகதி கத்யம் 7) ஸ்ரீரங்க கத்யம் 8) ஸ்ரீவைகுண்ட கத்யம் 9) நித்யக்ரந்தம்

ராமானுஜர் கி.பி. 1137 ஆம் ஆண்டு தனது நூற்றிருபதாவது வயதில் பரமபதத்துக்கு எழுந்தருளினார்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்பதற்கு மேல் உயர்ந்த மந்திரம் நமக்கு வேறு இல்லை.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்



## ஆழ்வார்கள்-பாசுரங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 1. பெரியாழ்வார் | 7 |
| 2. ஆண்டாள் | 16 |
| 3. குலசேகராழ்வார் | 11 |
| 4. திருமழிசையாழ்வார் | 15 |
| 5. திருப்பாணாழ்வார் | 2 |
| 6. திருமங்கையாழ்வார் | 62 |
| 7. பொய்கையாழ்வார் | 10 |
| 8. பூதத்தாழ்வார் | 9 |
| 9. பேயாழ்வார் | 19 |
| 10. நம்மாழ்வார் | 53 |
| | 204 |